விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 13 புதன்கிழமை (27.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 191

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இராணுவமே வெளியேறு!

## அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் திருமுறிகண்டியில் மக்கள் கோஷம்




(கிளிநொச்சி)

தமிழர் தாயகப்பகுதியில் இராணுவத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் திட்டமிட்டவாறு இடம் பெற்றுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## தாதிமார்கள் இன்று போராட்டம்

(கொழும்பு)

மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து நாடு முழுவதிலும் தாதிமார்கள் இன்றையதினம் சுகவீன விடுமுறைப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கொடுப்பனவு, சீருடைக் கொடுப்பனவு, அலுவலகக் கொடுப்பனவு என்பன அதிகரிக்கப்பட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே இவர்கள் இப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிய வருகின்றது.

இதேவேளை இது தொடர்பில் நேற்று மாலை நாடு முழுவதிலுமுள்ள சகல வைத்திய சாலைகளிலும் கடமையாற்றும் தாதிமார்கள் சங்கங்களுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (8-11)

## யாழ். மாதகல் பகுதியில் புதிய கடற்படை முகாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் கடற்படையினர் ஒரு புதிய முகாமொன்றை அமைத்து வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அங்கு காரைநகர்ப் பகுதியில் ஏற்கெனவே ஒரு பெரிய இராணுவ முகாம் இருக்கும் நிலையில் அதை அண்மித்த திருவடிநிலைப் பகுதியில் மற்றுமொரு கடற்படை முகாமின் தேவை என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் புத்த மதத்தை முன்னெடுக்க அசோகனின் மகள் சங்கமித்திரை முதல் வந்து இறங்கிய இடமாக அந்த இடம் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அப்பகுதியை புனித பகுதியாக அறிவித்து சிங்கள மக்களை குடியேற்றுவதே அரசின் நோக்கமாக இருக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டி மக்களை தாக்க உத்தரவு பிறப்பித்தது யார்?

### அட்டூழியம் செய்கிறது அரசு-மாவை

(கிளிநொச்சி)

மீள்குடியேற்றத்துக்காக அழைத்துவரப்பட்ட திருமுறிகண்டியைச் சேர்ந்த மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இராணுவத்தால் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

அந்த மக்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை எங்கே கொண்டு போனார்கள் என்று தெரியாது. இந்த அதிகாரத்தை யார் இராணுவத்திற்கு வழங்கியது. இதனால் தான் இந்த மண்ணிலே அட்டூழியம் செய்யும் இராணுவத்தை எமது மண்ணில் இருந்து வெளியேறுமாறு கோருகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## ஏற்றுமதி பொருளாதாரம் இறக்குமதியாக பயணம்!

(கொழும்பு)

கடந்த காலங்களில் 37 சதவீதமாக இருந்த இலங்கையின் ஏற்றுமதி இன்று 17சதவீதமாகக் குறைந்துள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவாகும்.

நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரம் 20 சதவீதத்தால் குறைந்துள்ளது. இது உழைக்கும் மக்களை பெரிதும் பாதிக்கின்றது.

சீனா, இந்தியா போன்ற நாடுகளின் நலனுக்காக (19ஆம் பக்கம் பார்க்க)

## சீனா, கொரியாவுக்கான புதிய தூதுவர்கள் நியமிப்பு

(கொழும்பு)

இலங்கைக்காக புதிய வெளிநாட்டு தூதுவர்கள் மூவரும், ஒரு உயர்ஸ்தானிகரும் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

இதன்படி, சீனாவின் புதிய தூதுவராக ஜியென்க்கோவும், தென்கொரியாவிற்கான புதிய தூதுவராக ரிமி ஹொய் சொங்கும், அஜர்பயிஜானின் தூதுவராக இப்ராஹிம் அசாட் மக்லுவும் நியமனம் பெற்றுள்ளனர்.

அதேவேளை, சீசெல்ஸ் ராஜ்ஜியத்தின் உயர்ஸ்தானிகராக விநிஸ்லோ விலியம் தமது நியமனக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8-11)

## இசட் புள்ளி மிகச் சிறந்தது!

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இசட்புள்ளி முறைமையானது மிகச் சிறந்தது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கூறினார்.

மிகச்சிறந்த ஐந்து பேராசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட இந்த முறைமையை நாம் ஆதரிக்கிறோம். இந்த முறைமையானது குறைந்தபட்ச கஷ்டங்களையே ஏற்படுத்துவதுடன் அனைத்து மாணவர்களுக்கும் நீதியை (19ஆம் பக்கம் பார்க்க)

## இணக்கப்பாடு எட்டப்பட்டதை அடுத்து பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டம் நேற்றுடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

கூட்டு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் போராட்டம் நேற்றுடன் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி கல்வி சாரா ஊழியர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

உயர்கல்வி அமைச்சுடன் பல்கலைக்கழக தொழிற் சங்க சம்மேளனக் கூட்டுக் குழு மேற்கொண்ட கூட்டு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தி சம்பள முரண்பாட்டை நீக்குமாறு தெரிவித்து கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த தொடர் போராட்டங்களை அவர்கள் முன்னெடுத்து வந்தனர்.

இந் நிலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலராக விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக முன்னாள் வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பிரதிச் செயலாளராக விக்னேஸ்வரனை நியமித்தார்.

கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக ப.விக்னேஸ்வரன் இன்று பொறுப்பேற்கின்றார்.

வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக இருந்த வி.ரி.செல்வரத்தினம் ஓய்வு பெற்றதையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராயிருந்த எஸ்.உதயகுமார் வட மாகாண கல்விப் பணிப்பாளராக பதில் கடமையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண (20ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் போதனாவின் பணிப்பாளரை இடமாற்றம் செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரை இடமாற்றம் செய்யக் கோரி சுகாதார அமைச்சுக்கு வைத்தியர்கள் கையொப்பமிட்டு கடிதமொன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளனர். இந்தக் கடிதத்தில் யாழ் போதனா வைத்தியசாலையில் பணி புரியும் 23 வைத்திய நிபுணர்களும் 203 வைத்தியர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையின் பணிப்பாளரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு அரச மருத்துவர் சங்கத்தின் யாழ் கிளையினர், யாழ் போதனா வைத்திய சாலையின் ஊழியர் சங்கம், தாதியர் சங்கம், பல்வைத்தியர் சங்கம் போன்ற சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அத்தோடு அரச மருத்துவர் சங்க யாழ் கிளையினரின் வேண்டுகோளுக்கமைய சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் குழு அண்மையில் வைத்தியசாலையில் பணி புரியும் பலரிடமும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் எனக் வலியுறுத்தி வைத்தியர்கள் கையொப்பம் இட்ட கடிதமொன்று சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (4,6)

# கட்டுப்பாட்டை இழந்த கன்ரர் முட்டிமோதியது மரத்தை



(மிருசுவில்)

கன்ரர் வாகனத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக வீட்டின் வேலியைப் பிரித்துக் கொண்டு வீட்டினுள் நின்ற மரத்துடன் கன்ரர் வாகனம் மோதிய விபத்தில் நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு மிருசுவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவது, மிருசுவில் சந்தியில் இருந்து வடக்கு மிருசுவில் நோக்கி பணித்துக் கொண்டிருந்த கன்ரர் வாகனம் பழுது காரணமாக அங்கிருந்த வீடொன்றின் வேலியைப் பிரித்து உள்சென்று அங்கிருந்த மரத்துடன் மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கன்ரரில் பயணித்த வரணிப் பகுதியைச் சேர்ந்த சி.சிவரூபன் (வயது 28) என்பவரே காயமடைந்து மிருசுவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (8-3-85)

# திருமுறிகண்டி மக்களை இராணுவம் தாக்கவில்லை

## முல்லை அரச அதிபர் தகவல்

(திருமுறிகண்டி)

"திருமுறிகண்டியில் மீள்குடியேறுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டு பாடசாலையொன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தாக்குதல் நடத்தி அம்மக்களை பலவந்தமான முறையில் மெனிக்பாம் முகாமுக்கு விரட்டியடித்ததாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

குறித்த மக்களை மீளவும் அவர்களது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்த்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை, அம் மக்களது சுயவிருப்பின் பேரிலேயே மீள்குடியேற்றத்துக்காக அழைத்து வரப்பட்டார்கள் என்றும் அவர்களை நிர்ப்பந்திக்கும் விதத்தில் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருமுறிகண்டி பிரதேசத்தில் மீள்குடியேற்றத்துக்காக அழைத்து வரப்பட்ட பொதுமக்களில் சிலர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் பலவந்தமாக மெனிக்பாம் நலன்புரி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி சுவீகரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று நேற்றைய தினம் முறிகண்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையிலேயே இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-11)

# ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கொண்டு ஏ.கே.47, எஸ்.எல்.ஆர், எஸ்.எம்.ஜி.பிஸ்டல்மற்றும்பாரிய குண்டுகளினை கையாளக் கற்றுக் கொண்டவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ்.மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டு உள்ளது.

பொன்னாலைச்சந்திமூளாய், சுழிபுரத்தினைச் சேர்ந்த பொன்னையா சிதம்பரநாதன் (வயது -36) என்பவர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி பயங்கரவாத குற்றப் புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு யாழ். மேல் நீதிமன்றில் இவரினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை ஒரு சான்றாக வைத்து வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது,

வழக்கினை விசாரணை செய்த நீதிபதி குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் குறித்த நபரினை கட்டாயப்படுத்தியே பெறப்பட்டுள்ளது எனக் கூறி நிராகரித்தார்.

குறித்த சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-4)

# கஷ்டப் படிகளை சீர்செய்துகொள்ளல்

அதிகஷ்டப் பிரதேச,கஷ்டப் பிரதேசப்படிகள் நிறுத்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உடனடியாக தமது வலயக் கல்வி அலுவலகமூடாக அதற்கான சீர்செய்தல் மேன் முறையீட்டினை வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும், அதன் பிரதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் ஒப்படைக்குமாறும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா. புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.(8,6)

# பாய்கிறது விசேட குழு பறக்கிறது பல இலட்சம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இடம்பெற்று வரும் சட்ட விரோத மின்பாவனையைக் கட்டுப்படுத்த கொழும்பில் இருந்து விசேட குழு ஒன்று யாழிற்கு வந்திறங்கியுள்ளது.

இந்த விசேட குழு யாழ் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இடம்பெறும் சட்ட விரோத மின் பாவனையை தேடித் தேடி தனது வேட்டையை ஆரம்பித்துள்ளது.

நேற்றும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 60 பேருக்கு 11 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்த மின்சார சபைக் குழுவினால் வடமராட்சி, வடமராட்சி கிழக்கு பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றது தெரியவந்தது.

குற்றம் சாட்டப்பட்ட 60 பேருக்கு எதிராகவும் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோடு நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் 11 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதில் உயர்ந்த பட்சமாக ஒருவருக்கு 5 இலட்சத்து 19 ஆயிரத்து 888 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் நேற்றும் யாழ். நீதிமன்றில் சட்ட விரோத மின்பாவனையாளர்கள் 12 பேர் யாழ் நீதிமன்றில் மின்சார சபைக்கு நஷ்டஈடாக 6 இலட்சத்து 27 ஆயிரத்து 502ரூபாய்செலுத்தினர்.

அத்தோடுசட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றத்திற்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்செலுத்தினர்.

குறித்த பன்னிருவரும் யாழ். நகரினை அண்டிய பகுதிகளிலும், கொக்குவில் பகுதி யிலும், கோப்பாய் பகுதியிலும் சட்டவிரோ தமாக மின்சாரம் பெற்றுவந்துள்ளனர்.

மின்சாரசபையின் விசேட குழுவினராலும் பொலிஸாராலும் இணைந்து கைது செய்யப்பட்ட இவர்கள் யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் மா.கணேசராஜா குறித்த பன்னிருவரையும் மின்சார சபைக்கு நஷ்டஈடாக 6 இலட்சத்து 27ஆயிரத்து 502 ரூபாயாக செலுத்த வேண்டுமெனவும் சட்டவிரோத மின்பாவனைக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (8-4)

# மதுவில் வந்தவன் சிறுவனை மோதினான்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் சைக்கிளில் சென்ற சிறுவனை மோதியதில் சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

யாழ். பரியோவான் கல்லூரி மாணவன் அன்ரன் அமிர்தராஜ் ஜெரோசன் (வயது 11) என்பவரே இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் கடற்கரை வீதியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த மாணவன் தனியார் கல்வி நிலையமொன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டு இருக்கையில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனொருவரால் மோதப்பட்டுள்ளான். (8-4)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr. P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205, 0214922403

**மீண்டும் யாழில்**

28.06.2012 முதல் 03.07.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்** (பழைய கமால் லொஜ்)

392/A, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

(சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)

(C-343)



## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் DMI சர்வதேச கொம்பனிக்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.

Distributor Supervisor
Asst.Manager Admin.Officer

தகைமை குறைந்தபட்சம் O/L சித்தி

6 மாத கால பயிற்சி வழங்கப்படும்.

பயிற்சியின்போது 12000/=-18000/= வரை ஊதியம் பெறலாம்.

பயிற்சியின் பின் 35000/=-45000/= வரை பெறலாம்.

தொடர்புகளுக்கு: 0776219536, 0754262907

(8716)



## தேவை

கச்சேரியடி பிரதான வீதியில் சுற்றுலா விடுதியை பராமரிப்பதற்கு 50 வயதிற்கு மேற்பட்ட ஆள் தேவை. சிங்களம் கொஞ்சம் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசலாம்.

தொடர்பு: ச. துரைரத்தினம்

T.P: 0212227861
0750484074

(8715)



செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



# இன்று ஒரு தகவல்

## மகா வீரர்

அவர் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தவர். இருக்கிற சொத்துக்கள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு தவம் செய்வதற்காக காட்டுக்குப் புறப்பட்டார். அவரிடமிருந்த அனைத்தையும் தானம் செய்துவிட்டார். இனி அவரிடம் எதுவுமே இல்லை.

அவ்வேளையிலே கடைசியாக ஒருவன் வந்து கையை நீட்டினான். "ஐயா... ஏதாவது கொடுங்கள்" என்றார்.

அவரிடம் கட்டியிருக்கிற வேட்டியைத் தவிர வேறு எதுவுமே கிடையாது. வேட்டியோ எட்டு முழம்... அதுவும் பட்டு வேட்டி. ஜரிகைக் கரையோடு இருக்கிறது.

கடைசியாக அதைத்தான் எடுத்துக் கட்டிக்கொண்டு அவர் புறப்பட்டு இருக்கிறார்.

எதிரிலே அவன் பரிதாபமாக நின்று கொண்டிருந்தான். அந்த எட்டு முழவேட்டியை இரண்டாக கிழித்தார்.

4 முழத்தை அவரிடம் கொடுத்தார். மீதி 4 முழத்தை தான் இடுப்பிலே கட்டிக்கொண்டு அவர் காட்டுக்குப் புறப்பட்டார்.

இவன் கையிலே கிடைத்த 4 முழத்தை எடுத்துக்கொண்டு கடைக்குப் போனான். அக்கடையில் பழைய பட்டு வேட்டி–ஜரிகை எல்லாம் விலைக்கு வாங்கும் வணிகர் ஒருவர் இருந்தார்.

அவரிடம் சென்று "இதை விலைக்கு எடுத்துக் கொள்கிறீர்களா?" என்றான். அதை வணிகர் வாங்கிப் பார்த்தார்.

"ஆகா... மிகவும் அருமையான வேட்டி–விலை உயர்ந்த ஜரிகை. இது எங்கு உங்களுக்குக் கிடைத்தது?" என்று கேட்டார்.

அவன் நடந்தவற்றை சொன்னான்; "அப்படியென்றால் ஒன்று செய்... இந்த வேட்டியின் இன்னொரு பாதியையும் மெதுவாக வாங்கிக் கொண்டு வா... உனக்கு நான் அதிக பணம் தருகிறேன்" என்றார்.

இவன் சற்று யோசித்துப் பார்த்தான். "சற்றுப்பொறுங்கள்... இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு நேராக காட்டுக்குப் போனான். அவர் எங்கே இருக்கிறார் என்று தேடி கண்டுபிடித்தான். அவர் ஒரு இடத்தில் தவக்கோலத்தில் இருப்பதைக் கண்டான்.

கட்டியிருந்த இடைவேட்டியும் அவர் அறியாமலே நழுவி கீழே விழுந்து கிடந்தது. இது இவனுக்கு மிகவும் வசதியாகிவிட்டது.

உடனே மெதுவாக நடக்கும் சத்தம் கேட்காமல் அடி மேல் அடி வைத்து அவர் அருகில் நெருங்கினான்.

அவர் கண்களை மூடிக் கொண்டு இருந்தார். இவன் மெதுவாக போய் கீழே கிடந்த அந்தத் துணியை எடுத்துக்கொண்டு சத்தம் எதுவுமின்றி திரும்பி நடந்தான்.

சற்று தூரம் நடந்து விட்டு; ஓட ஆரம்பித்தான். அச்சமயத்தில் அவனது காலிலே... கீழே கிடந்த முள் ஒன்று "நறுக்" கென குத்தியது.

வலி தாங்கமுடியாமல் "அம்மா" என்று கத்தி விட்டான். இந்த சத்தத்தில் கண்ணை மூடிக்கொண்டிருந்த அவரின் தவம் கலைந்தது.

மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தார். தன் இடையிலே இருந்த வேட்டி அவன் கையிலே இருக்கிறது.

இப்போது அவர் நினைக்கிறார். "இந்த வேட்டி மீது நான் வைத்த ஆசை அல்லவா அவனைத் திருடனாக மாற்றி விட்டது! தான் ஒரு பொருள் மேலே வைத்த பற்று... இன்னொரு மனிதனை திருடனாக மாற்றுவதற்குக் காரணமாகி விட்டது" என்று நினைக்கிறார்.

அப்படி நினைத்த அவர் யார் தெரியுமா? அவர்தான் மகா வீரர்.

"இழந்து விட்டேன்... இழந்து விட்டேன்... என்று சொல்கிறாயே... நீ எதைக் கொண்டு வந்தாய்... இங்கே இழந்து விடுவதற்கு? நீ எதை உண்டாக்கினாயோ ... அது அழிந்து விட்டது... என்று சொல்வதற்கு?"

இது அவருடைய சிந்தனை. இன்று நமது சிந்தனையெல்லாம் வேறு மாதிரி இருக்கிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சொத்து மதிப்பீட்டு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வவுனியா, மன்னர் மாவட்டங்களின் சொத்து மதிப்பீடுகளை சுமார் 30 வருடங்களின் பின்பு யாழ். மாவட்டத்திலுள்ள வடபிராந்திய விலை மதிப்பீட்டு காரியாலயம் மேற்கொண்டு வருகின்றது என யாழ். மாவட்ட மதிப்பீட்டாளர் எஸ். ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபிராந்திய காரியாலயத்துடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள விலை மதிப்பீட்டு காரியாலயங்கள் தற்போது இணைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் அநுராதபுரம் மாவட்டத்தின் இராஜரட்டை பகுதியிலுள்ள விலை மதிப்பீட்டு காரியாலயத்துடன் இணைக்கப்பட்டிருந்த இந்த இரண்டு மாவட்ட காரியாலயங்களும் தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள வடபிராந்திய விலை மதிப்பீட்டு காரியாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இதனூடாக இந்த மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் சொத்து மதிப்பீடுகள், அரச திணைக்களங்களின் சொத்து மதிப்பீடுகள், ஏனைய மதிப்பீடுகள் செய்யும் பணிகள் வடபிராந்திய காரியாலயத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்தோடு வட மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களின் சொத்து மதிப்பீட்டு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் முதற்கட்டமாக பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் அரச திணைக்களங்களின் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் தனியாருக்கு சொந்தமான காணிகளிலும் கட்டடங்களிலும் இயங்கிவரும் அரச நிறுவனங்கள் கொடுக்க வேண்டிய வாடகைக் கொடுப்பனவுகளும் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ–6)

# சேவைக்காலத்தை பூர்த்தி செய்தோருக்கு மிக விரைவில் இடமாற்றம் வழங்கப்படும்

(யாழ்பாணம்)

வன்னி மாவட்டங்களில் சேவைக்காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு மிகவிரைவில இடமாற்றம் வழங்கப்படும் என வட்மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மீண்டும் உறுதிப் படுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வன்னி மாவட்டங்களில் ஆசிரியர் சேவையினைப் பூர்த்தி செய்து இடமாற்றத்திற்கு தகுதியான நிலையில் 107 ஆசிரியர்கள் உள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றம் தொடர்பில் கூடிய கவனம் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களின் இடமாற்றக் கோரிக்கையை இடமாற்ற சபை ஏற்றுக் கொண்டுள்ளது.

இருப்பினும் பதிலீட்டாசிரியர்கள் இல்லாத காரணத்தினால் இடமாற்றம் காலதாமதம் ஆகின்றது.

எனவே, பதிலீட்டாசிரியர்கள் நியமிக்கப்பட்டவுடன் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த வன்னியில் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த 107 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ–6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்திரிக்காய் | 110 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 90-110 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 |
| தக்காளி | 160 | 150 | 150 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 70 | 80 |
| கரட் | 140 | 150 | 160 |
| பூசணி | 60 | 70 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 120-150 | 140 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 100 |
| பாகற்காய் | 140 | 180 | 100 |
| வெண்டிக்காய் | 90 | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | -- |
| பயற்றங்காய் | 160 | 170 | 90 |
| லீக்ஸ் | 160 | 140 | 160 |
| பீற்றூட் | 70 | 80 | 90 |
| கறிமிளகாய் | 140 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 180 | 140 |
| போஞ்சி | 170 | -- | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | 90 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 110 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 25 | 18-20 |

# இராசி பலன்

27.06.2012
(ஆனி 13, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
அட்டமி மாலை 5.01 மணிவரை
அத்தம் பின்னிரவு 2.06 மணிவரை
இராகுகாலம் 11.55-1.25 மணிவரை
சுபநேரம் 4.25-5.55 மணிவரை

**மேடம்** உற்சாகத்தோடு பணி புரியும் நாள், வியாபாரத்தில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலம் சீராகும், சுவாரஸ்யமான நாள்.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்தி கரமாக அமையும்.

**மிதுனம்** பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன பழுதுச் செலவுகள் குறைவடையும், சந்தோஷமான அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**கடகம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், தொழிலில் தொல்லை தந்தவர்கள் விலகுவர், சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**சிங்கம்** ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், வர்க்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** சுப விரயங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும், போசன சுகமுண்டு.

**துலாம்** நாணயத்தோடு நடந்து கொள்வதால் எல்லோரும் உங்களைப் பாராட்டுவார்கள், பிரியமானவர்களுடன் சில சந்திப்பு இடம்பெறலாம், சுப செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் பகை அகலும்.

**தனுசு** தனவரவுகள் திருப்திகரமாக இருக்கும், தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**மகரம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிபுக்கு வரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்** இறைவழிபாட்டல் இனிமை காண வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் மனச்சஞ்சலங்கள் கூடும்.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், வாழ்க்கைத்துணை வழியே வரவுகள் வந்து சேரும், தொழில் முன்னேற்றமுண்டு, கனவுகள் பலிதமுண்டு, பண வரவுகள் திருப்தி தரும்.

வளவன்

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில்

# காணிகளை பெற்றவர்கள் உரிய ஆவணத்தை பெறவேண்டும்

## அதன் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிய ஆவணங்களை சட்டப்படி பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அந்தக்காணிகளை ஆணைக்குழு மீளவும் பெற்றுக்கொள்ள நேரிடும் என யாழ். மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரசபையின் பணிப்பாளர் என்.விமல் ராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1972ஆம் ஆண்டு தொடக்கம் 1984ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணி சீர்திருத்த ஆண்ணக் குழுவினால் காணிக்கச்சேரியின் சிபாரிசின் அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட காணிகளுக்குரிய உறுதிகளை சட்டத்தின்படி அதன் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த கால யுத்தசூழலை காரணங்காட்டி இதுவரை அந்தக்காணிகளுக்கான சட்ட ஆவணங்கள் உரிமையாளர்களினால் பெறப்படவில்லை.

அத்தோடு 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காணி சீர்திருத்த ஆணைக்குழுவும் வட பகுதியில் இயங்கவில்லை.ஆனால் தற்போது யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இங்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களின் காணிப்பிணக்குகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படுகின்றன.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில் தற்போது தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

எனவே ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய சட்ட ஆவணங்களை அதன் உரிமையாளர்கள் யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள காணி சீர்திருத்த ஆணைக் குழுவிடம் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

அத்தோடு உரிய ஆவணங்களைப் பெற்றிருந்த போதும் அதைத்தவறவிட்டவர்களும் பதிவினை மேற்கொண்டு புதிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் காணிகளிலிருந்த உச்சப்பயனைப் பெறும் நோக்கில் லீசிங் முறையில் காணிகள் வழங்கப்பட்டன.

எனவே காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய ஆவணங்களைச் சட்டப்படி பெற்று அதன் உரிமையாளர் உரித்துடையதாக்க முன்வர வேண்டும். தவறும் பட்சத்தில் அந்தக் காணிகளை ஆணைக்குழு மீண்டும் கையகப்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பரீட்சைகள் திகதி மாற்றம்

யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் முதலாம் அரையாண்டு பரீட்சை தேசிய கணக்கியல் டிப்ளோமா 3 ஆம் வருடக் கற்கை நெறிக்காக வணிகச் சட்டம், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 4 ஆம் வருடக் கற்கை நெறிக்கான கணனிக் கணக்கீடு, உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா, 2 ஆம் வருடக் கற்கை நெறிக்கான கற்பித்தல் முறையியல் ஆகிய பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறவிருந்து தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உயர் தொழில்நுட்பவியல் நிறுவன இயக்குனர் எஸ்.ஜே.எம்.சகாயன் அறிவித்துள்ளார். (அ-9)




# ஐம்பொன்னாலான இரண்டு விக்கிரகங்கள் ஒப்படைப்பு

மீசாலை வடக்கு வேம்பிராய் கலட்டி விநாயகர் ஆலயத்தில் திருட்டுப்போன ஐம்பொன்னாலான சுவாமி விக்கிரகங்கள் இரண்டு யாழ்.நீதிமன்றின் உத்தரவுக்கமைய நேற்றையதினம் ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கோவிலின் ஐம்பொன்னாலான பிள்ளையார் விக்கிரகம் மற்றும் சண்டேஸ்வரர் விக்கிரகம் ஆகியன கடந்த மாதம் 26 ஆம் திகதியன்று திருட்டுப் போயிருந்தது.

பின்னர் இவை யாழ். முலவைச் சந்தியிலுள்ள மரக்காலையொன்றிலிருந்து சுவாமி வாகனங்களோடு சேர்த்து மீட்கப்பட்டிருந்தது.

இவை தொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நடைபெற்று வந்தநிலையில் குறித்த இரு சுவாமி விக்கிரகங்கள் இரண்டினையும் ஆலயத்திடம் வழங்குவதற்கு மன்று அனுமதியளித்துள்ள நிலையில் குறித்த இரு விக்கிரகங்களும் நேற்றையதினம் வழங்கப்பட்டன.

ஏனைய சுவாமி வாகனங்களில் இரண்டு யாழ் கொண்டலடி பிள்ளையார் ஆலயத்தினாலும் மற்றையதொன்று மானிப்பாய் வீதி நாலுகால்மடம் ஞானவைரவர் ஆலயத்தினாலும் உரிமைகோரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

# குடித்துவிட்டு குத்தாட்டமாடிய நால்வருக்கு அபராதம் விதிப்பு

மதுபோதையில் வீதியில் நின்று குத்தாட்டம் ஆடிய நான்கு குடிமகன்களுக்கு ஒரு வாரச்சிறையும் 21ஆயிரம் ரூபா அபராதமும் யாழ். நீதிமன்று விதித்துள்ளது.

குறித்த நால்வரும் மதுபோதையில் கே. கே. எஸ். வீதியில் நின்று வீதியால் பயணிப்போருக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் மா. கணேசராசா குருநகரைச் சேர்ந்த குடிமகனுக்கு ஒருவார கால கட்டாச் சிறையுடன் 6 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தாவிடின் ஒரு மாத சிறைத்தண்டனையும் மற்றொரு குடிமகனுக்கு ஒருவார கால கட்டாயச்சிறையுடன் 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறையும் யாழ். நகரை சேர்ந்த குடிமகனுக்கு ஒரு வார கட்டாயச் சிறையும் 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாதகால சிறையும் செம்பியன்பற்று பருத்தித்துறையைச் சேர்ந்த குடிமகனுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-2-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், யாழ்.பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், யாழ். நகரம் முழுவதும் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# புகையிலை கொள்வனவு செய்தவர் 13 இலட்சத்துடன் தலைமறைவாகினர்

(கரவெட்டி)

வடமராட்சி புகையிலை வியாபாரியிடம் இருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலையை கொள்வனவு செய்து தலைமறைவாகிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி மந்திகைப் பகுதியைச் சேர்ந்த குறித்த புகையிலை வியாபாரியிடம் 13 இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலையை கொள்வனவு செய்த குறித்த வியாபாரி பின் தலைமறைவாகியுள்ளார்.

தலைமறைவாகிய புகையிலை வியாபாரியை தேடியலைந்தபோதும் அவரைப்பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

குறித்தநபர் தலைமறைவாகிய விடயம் தெரிந்ததையடுத்து பருத்தித்துறை மற்றும் வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து வவுனியாவைச்சேர்ந்த புகையிலை வியாபாரியை பொலிஸார் வலை வீசித் தேடிவருகின்றனர். (அ-2-3-24)

# 12.5 மில்லியன் ரூபா செலவில் தேர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கென புதிய சித்திரத்தேர் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச்சித்திரத்தேரானது 12. 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்றதும் எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதி வெள்ளோட்டத்திற்காக விடப்படும் என ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-3-29)

# கலை மற்றும் கலாசார பண்புகளை மாணவர்கள் கட்டிக்காக்க வேண்டும்

## வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் அறிவுரை

(மல்லாவி)

பாடசாலைக்காலத்தில் செய்யும் சாதனைகள் நீங்கள் உயர் நிலைக்கு வரும் போது நிச்சயமாக எதிர்காலத்தில் உதவும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப்போட்டியில் வெற்றியீட்டிய அணிகளுக்கு வெற்றிக்கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபடும் போது சகோதரத்துவம், விட்டுக்கொடுக்கும் தன்மை, புரிந்துணர்வு, தலைமைத்துவ பணிகள் ஆகியவற்றில் சிறந்து விளங்க வேண்டும்.

விளையாட்டுத்துறையில் எவ்வளவுக்கு முதன்மை வகிக்கிறீர்களோ அதே அளவில்




கல்வியிலும் மற்றும் இணைப்பாட செயற்பாடுகளிலும் ஒழுக்கத்திலும் திறமைமிக்கவர்களாக மிளிர வேண்டும்.

எமது கலை, கலாசார, பாரம்பரிய பண்பாடுகளை கட்டிக்காத்து நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-3-15)

# அவுஸ்திரேலியா உறுதியாக இருந்தால் சட்டவிரோத குடியேற்றங்களை தடுக்கலாம்

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஆலோசனை

(கொழும்பு)

**இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக அவுஸ்திரே லியா செல்பவர்களை தடுப்பது தொடர்பாக அவுஸ்தி ரேலிய அர சாங்கமே கடுமையாக செயற்பட வேண்டு மென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணா திலக்க அமுனுகம கூறி யுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அவுஸ்திரேலியாவுக்கான சட்ட விரோத குடியேற்ற விவகாரம் தொடர்பில் அந்நாட்டு அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமான முறையில் செயற்பட்டு வருகின்றோம். இருப்பினும் சட்ட விரோதமாக குடியேறுபவர்களை எக்காரணம் கொண்டும் பொறுப்பேற்க முடியாது என்ற கொள்கையில் அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியாக இல்லாதவரை இதனை முற்றாக ஒழிப்பது கடினமாகும்.

சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியா செல்வோர் தொகை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. அவற்றிற்கும் மேலதிகமாக பாளி டயலொக், ஆசியான் பேரவை ஆகியவற்றிலும் அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத குடியேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

இதனைத்தவிர இலங்கைப்பொலிஸார், கடற்படையினர், கரையோர பாதுகாப்பு படையினர் முழுநேரக் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலும் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவிலிருந்து எப்படியோ படகுகள் மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்வது தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினர், தாம் சர்வதேச சட்ட கொள்கையினை கடைப்பிடிக்க வேண்டியுள்ளதால் தமது நாட்டில் தஞ்சமடைவோரை பொறுப்பேற்க வேண்டிய கட்டாயத்திலிருப்பதாக வலியுறுத்துகின்றனர்.

சர்வதேச சட்டக் கொள்கையினை நாமும் ஏற்றுக் கொள்கிறோம். அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த விடயத்தில் தமது கொள்கையினை சற்று தளர்த்தி மாற்றுக் கொள்கையினைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

எமது நாட்டுப் பிரஜைகளை அவுஸ்திரேலியாவுக்குள் பொறுப்பேற்க வேண்டாமெனக் கூறுவதில் நாம் கவனம் செலுத்தவில்லை. சட்ட விரோதமான முறையில் பாதுகாப்பற்ற படகுகளில் செல்லும்போது இடம்பெறும் மரணங்கள், காணாமற்போதல் மற்றும் வேறு தீவுகளில் சிக்கி அவஸ்தைக்குள்ளாதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் எமது இலங்கைப் பிரஜைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு எமது இலங்கை அரசாங்கத்திற்கேயுள்ளது.

இதனை வியாபாரமாக கொண்டு பலர் பணம் சம்பாதிக்கின்றனர். ஏமாறுகின்றனர். இவற்றை தடுத்து நிறுத்த வேண்டியது எமது பொறுப்பு. அதற்காகவே சட்டவிரோதமாக குடியேறுபவர்களை நாட்டிற்குள் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதில் உறுதியாக இருக்குமாறு தாம் அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறோமெனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# கச்சதீவு அருகே 2 ஆயிரத்து 500 தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு

கச்சதீவு அருகே இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 2 ஆயிரத்து 500 பேரை இலங்கை கடற்படையினர் கத்திமுனையில் விரட்டியடித்ததோடு வலைகளை அடித்து எறிந்து மீன்களை கொள்ளையடித்து சென்றதாக இந்திய ஊடகங்களில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தை சேர்ந்த 2 ஆயிரத்து 500 மீனவர்கள் 600 விசைப் படகுகளில் நேற்று முன்தினம் மாலை மீன்பிடிக்க சென்றனர். கச்சதீவு அருகே இந்திய கடல் எல்லையில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு 5 படகுகளில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை கத்தி முனையில் மிரட்டியதோடு வலைகளை அறுத்து எறிந்தனர். மேலும் படகுகளை சேதப்படுத்தியதோடு மீன்களையும் கொள்ளையடித்தனர். உடனடியாக அங்கிருந்த மீனவர்கள் அனைவரும் வெளியேறினர். இலங்கை கடற்படையினரால் ஒரே நேரத்தில் மீனவர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ள சம்பவம் இராமேஸ்வரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு திருவருள் மிகு குருநாத சுவாமி கோயில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டான அலங்கார உற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9)

## பழக்கடையில் திருட்டு

(ஆனையிறவு)

பழக்கடை ஒன்றில் உள்ள பழங்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான தர்மபுரம் பொதுச் சந்தையில் அமைந்துள்ள பழக்கடையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, குறித்த சந்தையை உடைத்தே இத்திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (அ-3-264)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வி நூற்றாண்டையொட்டிய போட்டிகள்-2012

**வடமாகாணத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்ற முடியும்**

தொனிப்பொருள்- விசேடதேவைக்குட்பட்டவர்களை கல்வியினால் வலுவூட்டுவோம்.

மாணவர்களுக்கானது- சித்திரப்போட்டி பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்து A3 அளவுடைய கடதாசியில் விரும்பிய வர்ண ஊடகத்தை பயன்படுத்தி வரைந்து அனுப்ப வேண்டும்.

★ உட்படுத்தற் கல்வி வகுப்பறை
★ விசேட தேவையுடைய மாணவர்களின் சாதனைகள்
★ விசேட தேவையுடைய மாணவர்களை ஏற்றுக்கொள்வோம்
★ எல்லோருக்கும் கல்வி

1. ஆரம்பப்பிரிவு தரம் - 1-5 வரை
2. இடைநிலைப் பிரிவு தரம் 6-11 வரை
3. மேற்பிரிவு க.பொ.த.உயர் தரம்

ஆசிரியர்களுக்கானது -சகல பாடத்துறை ஆசிரியர்களும் பங்குபற்றலாம்.

1. இறுவெட்டு தயாரித்தல் போட்டி

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்தத்தக்க வகையில் அமைதல் வேண்டும்.

2. கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டி

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய கற்றல்- கற்பித்தல் சாதனங்களாக அமைதல் வேண்டும்.

☆ இப்போட்டிக்கான முடிவுத் திகதி 15-07-2012 சித்திரங்களை, இறுவெட்டுகளை நேரில் அல்லது தபால் மூலம் சமர்ப்பிக்கலாம்.


☆ கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டிக்கான விண்ணப்பம் சுயமாக தயாரிக்கப்பட்டு 10/07/2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

மேற்படி போட்டிகள் மாவட்ட மட்டத்திலும் ,மாகாண மட்டத்திலும் நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். மாவட்ட, மாகாண மட்டத்தில் தெரிவானவர்களுக்கு பரிசில்கள், விசேட கேடயங்கள் வழங்கப்படும்.

த.சிவகுமார்
விரிவுரையாளர் (விசேட கல்வித்துறை)
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.
0776184250

S.K. யோகநாதன்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### ஒன்பதாம் திருவிழா

### அன்பே சிவமாய் விளங்கும் ஆதிபராசக்தி

அன்பே சிவமாய் அமர்ந்தவளே ஆதிபராசக்தி
அகிலமெங்கனும் நிறைந்தவளே ஆதிபராசக்தி
மணிபல்லவத்தீவில் மகிழ்ந்திருப்பவளே ஆதிபராசக்தி
மயக்கம் எல்லாம் தீர்ப்பவளே ஆதிபராசக்தி
நயினையம் பதியில் உறைபவளே ஆதிபராசக்தி
நானிலம் முழுதும் காப்பவளே ஆதிபராசக்தி
எங்கும் ஜோதியான எழிலுருவே ஆதிபராசக்தி
எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுகிறேன் ஆதிபராசக்தி

குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்
குப்பிளான்

### பல்லாண்டு வாழ்க பரமேஸ்வரி தாயே

இன்புறு ஈழமண்ணில் இனிதாய் இருந்து
இன்னல் களையும் இன்பமயமானவளே!
தொன்று தொட்டு தொண்டர்களின்
தொல்லை வினைகளை தீக்கிரையாக்குபவளே!
பன்றிக்காய் இரங்கிட்ட பரமசிவன் பாதியே!
பராசக்தி ஆனவளே ! பார்வதியே!
என்றும் நீ இங்கிருந்து எம்மைக்காக்க,
உம்மையே இறைஞ்சுகின்றோம் ரஞ்சினியே!
சொல்லுக்குள் அடங்கா சுந்தர வடிவினளே!
சுப்பனைப் பெற்றவளே! சுகங்களைத்தருபவளே!
கல் சிலையாய் நீயிருக்க உன்னைக் கல்லென்றே கருதி
கண்ணெதிரே நடக்குதடி கயவரின் சதி –மணி
பல்லவத்திலே நீ மகிழ்வாய் இருப்பாய்
மதம் கொண்டோர் உன் பதியை
மாற்றுக்கோயில் ஆக்கும் வரை
பல்லாண்டுகள் பழைமை பூத்த பழங்குடிகள் நாமெனில்
நாம் வாழ அருள் தரும் நீ வாழ்க! பல்லாண்டு...
நின் கோயில் வாழ்க! நெடு ஆண்டு!

சாரதி

### பூசித்துவந்தோம் தாயே உன் திருவுருவம் நயினை நாகபூஷணியே

பூசித்து வந்தோம் தாயே உன் திருவுருவம்
நேசித்து வந்து கொண்டிருக்கிறோம் அம்மா
உன் திருப்பாதம்
கோசித்து வருவோம் மாதா உன் திருநாமம்
வாசித்து வந்து கொண்டிருக்கிறோம் அம்மையே
உன் கௌரிக்காப்பு பாமாலை
நயினை நாகபூஷணியே

சுகிர்தராணி தர்மகுலசிங்கம்
கல்லுவம் -கரவெட்டி




சிறி நதியா
நகை மாளிகை &
டிஜிட்டல்
கலர்லாப்
56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 6744
இல.108A , [illegible]
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 8412

# புடம் போட்ட தங்கம்போல் மிளிர்ந்த திருமதி பே.தெய்வானைப்பிள்ளை



ஆசிரியை திருமதி தெய்வானைப் பிள்ளை பேரம்பலம் (தங்கம்மா ரீச்சர்) 1937 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பத்தாம் திகதி யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் உள்ள கச்சாய் கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தையார் எருவன் வரணிப் பகுதியை சேர்ந்த ஆசிரியர் முருகேசு மயில்வாகனமாவார். அமரரது தந்தையார் சிறு வயதினராக இருக்கும் போதே காலமாகிவிட்டார். இவரின் தாயார் உசன் மிருசுவிலை சேர்ந்த அரணாசலம் சின்னப்பிள்ளையாவார்.

சிறுபிள்ளையாக இருக்கும் போதே இவர் அன்பும் அறிவும் விவேகமும் அடக்கமும் பண்பும் நிறைந்தவராக விளங்கினார். விளையும் பயிரை முளையிலே தெரியுமன்றோ! அமரர் மிகவும் விவேகியாக விளங்கினார். முதலாம், இரண்டாம் வகுப்பு வரை கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் கற்றுவிட்டு மூன்றாம் ஆண்டு தொடக்கம் சி.பா.த. (S.S.C) வரை இன்று உசன் இராமநாதன் மகா வித்தியாலயமாக விளங்குகின்ற உசன் சைவத்தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றார். அதன்பின் ஆங்கில மொழி மூலம் (S.S.C) வரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கல்வி கற்றார்.

அமரருக்கு 1957-1958 வரை திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக்கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பயிற்சி பெறும் காலத்தில் உப அதிபர் மௌன தவமுனிவர் பொன்.கைலாசபதி மற்றும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையிடமும் கல்வி கற்கும் பேறைப்பெற்றார்.

பயிற்சி முடிந்ததும் புடம் போட்ட தங்கம்போல் நல்லாசிரியராக மிளிர்ந்தார். 02.11.1959 இல் இவருக்கு வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் முதல் நியமனம் கிடைக்கப் பெற்றது. அங்கு நான்கு வருடங்கள் கற்பித்து பின் தமது சொந்த ஊரிலுள்ள உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் முப்பத்து மூன்று ஆண்டுகள் வரை கற்பித்து 10.07.1995 ஆம் திகதி 58 வயதில் ஓய்வு பெற்றார்.

முப்பத்தேழு ஆண்டுகள் ஆசிரியையாகவே சேவை செய்து நற்புகழீட்டி கொண்டார். எந்தவொரு பாடத்தையும் திறம்படக் கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர். தங்கமான ஆசிரியர் என்பதால் எல்லோரும் தங்கம்மா ரீச்சர் என அன்பாக இவரை அழைத்தனர். இவர் வகுப்புக்கு சென்றால் மாணவர்கள் எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. தாய்மை உள்ளத்தோடு மாணவர்களை அரவணைத்து மாணவர் நிலைக்கு கீழ் இறங்கி பொருத்தமான கல்வியை புகட்டும் திறன் மிக்கவர். இணை பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை செயற்படுத்துவதிலும் அவர் பெரும் பங்காற்றினார். பல ஆயிரக்கணக்கான மாணவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக்கி இவர்களின் நல்வாழ்வுக்கு வழி காட்டியவர்.

## நீத்தார் நயப்புரை

அமரர் தெய்வானைப் பிள்ளை தம்முடன் ஆசிரிய பயிற்சி பெற்ற முகமாலை எழுதுமட்டுவாழை சேர்ந்த க.பேரம்பலம் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்களது இல்லறப்பேற்றால் நான்கு மக்கட் செல்வங்கள் கிடைத்தன. மூத்த பெண்பிள்ளை கலாநிதி துஷ்யந்தி மிகுந்தன் யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் மூத்த மகன் அரவிந்தன் யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்தாளராகவும் கடமையாற்றுகின்றார். இரண்டவாது மகன் ரகுவிந்தன் சுவிஸ்நாட்டில் வேலை பார்க்கிறார். மூன்றாவது மகன் வினோவிந்தன் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் ஆசிரியராக இருக்கின்றார். பேராசிரியர் கு.மிகுந்தன் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக விவசாய பீடத்திலும் திருமதி சோமினா அரவிந்தன் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் திருமதி ரேணுகா ரகுவிந்தன் சுவிஸ் நாட்டிலும் திருமதி கமலவேணி வினோவிந்தன் திருநெல்வேலி ஆகிய இவர்கள் நால்வரும் அமரரின் மருமக்களாவர்.

அமரரது குலதெய்வம் உசன் கந்தப்பெருமான். எந்நேரமும் முருகன் நாமத்தையே உச்சரித்துக் கொண்டு வாழ்ந்தார். தமது கணவன், பிள்ளைகள் நலனிலும் உயர்விலும் மிகவும் அக்கறை கொண்டு வெற்றியும் கண்டவர். என்றும் ஒன்றாகவே ஆசிரிய மாணவியாகவும் ஆசிரியையாகவும் எனது உற்ற சிநேகிதியாகவும் ஐம்பந்து மூன்று ஆண்டுகள் இருந்தவர்.

வையக வாழ்வில் எல்லா செல்வங்களும் கிடைக்கப் பெற்ற அம்மையாரின் ஆத்மா வானுறையும் தெய்வமாகி விட்டது.

28.05.2012 அன்று திங்கட் கிழமை இவரின் குலதெய்வமாகிய உசன் கந்தப் பெருமானின் மூன்றாம் உற்சவ தினத்தன்று அன்னாரின் ஆத்மா பன்னிருகரத்தோனின் பாதங்களை அடைந்தது என்றும் அவர் ஆத்மா நித்திய சுகத்தையடைய பிரார்த்திப்போமாக.

பண்டிதை திருமதி பொன்.பாக்கியம்
ஓய்வுநிலை ஆசிரியர்,
பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை தலைவர்.

# மலேரியா நோயாளர்கள் வெளிநாட்டிலிருந்தே வருகின்றனர்

## மலேரியா அமைப்பு சுட்டிக்காட்டு


(கொழும்பு)

இலங்கையில் அடையாளம் காணப்படுகின்ற மலேரியா நோயாளர்களை விடவும் வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் மலேரியா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகம் என மலேரியா ஒழிப்பு அமைப்பின் பணிப்பாளர் டாக்டர் சரத் தெனியாகெ தெரிவித்துள்ளார்.

இதன்படி இலங்கையில் இதுவரையான காலப்பகுதியில் 18 மலேரியா நோயாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து 38 மலேரியா நோயாளர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். இதனால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் விசேட வைத்திய திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)



வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் அவல வாழ்க்கையில் குடும்பமொன்றின் குடிசை வீட்டை படத்தில் காணலாம். (படம்:- எஸ்.செல்வதீபன்)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலக சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பொது நூலகத்தின் தலைவர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம பிருந்தினராக வடமாகாண முறைசாராக் கல்வி,தொழில்நுட்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கமல்ராஜன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற ஆசிரியர் ந.சின்னராசா, வடமாகாண கல்வித் திணைக்களக் கணக்காளர் செல்வி ஸ்ரீமதி பரமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(அ-9)


# தமிழ் இதழியல் வரலாறு

e-Exhibition

தமிழர்களின் தகவல் பரிமாற்றத்தின் பாரம்பரியங்களையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் முகமாக 'தமிழ் இதழியல் வரலாறு' எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான கண்காட்சி.

இடம் :- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
காலம் :- 28,29/06/2012 வியாழன் மற்றும் வெள்ளி
காலை 09.00 முதல் பிற்பகல் 2.00 வரை
பிரதம விருந்தினர் :- பேராசிரியர். வசந்தி அரசரட்ணம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
சிறப்பு விருந்தினர் :- திரு.முத்து.ராதாகிருஷ்ணன்
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
வட மாகாணம்.
தலைமை :- திரு.அ.அகிலதாஸ்
அதிபர்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்களும், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி ஊடக கழக மாணவர்களும் இணைந்து ஒழுங்கமைத்து நடாத்துகின்றனர்.

ஒழுங்கமைப்பு

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் (MRTC)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இல. 84 ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல:- 021 222 9873

(சி-348)

# யாழ்ப்பாண எம்.பிக்களை இராணுவம் மதிப்பதில்லை

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்று விடும் என்ற காரணத்தினாலேயே வட மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் இந்த வருடத்திலேயோ அடுத்த வருடத்திலேயோ நடத்துவது குறித்து தீர்மானிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தை விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றியவுடன் தேர்தலை நடத்திய அரசாங்கம் வடமாகாணத்தை புலிகளிடம் இருந்து கைப்பற்றி பல காலம் ஆன நிலையிலும் தேர்தலை நடத்த அக்கறை காட்டவில்லை. அத்துடன் அந்த பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய பல வேலைத்திட்டங்களை சரிவர நிறைவேற்றவில்லை.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினால் கட்டாயம் அந்த தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வெற்றி பெறும். இதனை அறிந்துள்ளதால் அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் இருந்து வருகிறது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வெற்றி பெற்றுவிட்டால் அரசாங்கத்திற்கு தேவையானவற்றை செய்து கொள்ள முடியாது. இதன் காரணமாகவே இராணுவத்தை பயன்படுத்தி தமக்கு தேவையானவற்றை செய்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை மதிப்பதில்லை. நடாளுமன்ற உறுப்பினர்களுடன் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதில்லை. அவர்கள் யாழ்ப்பாணத்தில் விகாரைகளை கட்டுகின்றனர். காணிகளை கைப்பற்றுகின்றனர். அரசாங்கம் இந்த பிரதேசத்தில் அராஜகம் செய்கிறது. வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் கிழக்கில் பிள்ளையான் வென்றது போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார். (அ-2)

# ஆதிமனிதனின் எலும்பை ஆய்வுசெய்ய வெளிநாட்டு நிபுணர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுக்கு முந்தியகால மனிதனின் முழுமையான எலும்புத்தொகுதி தொடர்பாக மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு உயிரி- மானிடவியல் ஆய்வாளர்களுக்கு இலங்கை தொல்பொருள் ஆய்வுத்திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

களுத்துறை பஹியங்கல பஹெய்ன் குகையில் இருந்து வரலாற்றுக்கு முந்தியகால மனிதனின் முழுமையான எலும்புக்கூட்டை இலங்கையின் தொல்பொருள் ஆய்வுத் திணைக்கள ஆய்வாளர்கள் கடந்த 15 ஆம் நாள் கண்டுபிடித்தனர்.

இந்த எலும்புத் தொகுதியின் மாதிரிகளை காபன் கால அளவு கணிப்பு பரிசோதனைக்காக அமெரிக்காவுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளோம் என்று இலங்கை தொல்பொருள் ஆய்வுத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நிமால் பெரேரா தெரிவித்துள்ளார்.

வரலாற்றுக்கு முந்திய மனிதனின் இந்த எலும்பு தொகுதி 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாக இருக்கலாம் என்று நம்புகிறோம். இந்த எலும்பு தொகுதியை பாதுகாக்கும் வசதிகள் இல்லை என்பதால் அந்த இடத்திலேயே அது இருக்கும்.

பிரித்தானிய நிபுணர்கள் வந்த பின்னர் அதனை பாதுகாப்பது எப்படி என்று முடிவு செய்யப்படும். அவர்களின் ஆலோசனைப்படியே எதிர்கால ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மனித எலும்புத் தொகுதியுடன் ஆதிமனிதன் பயன்படுத்திய உணவுப் பொருட்கள், கல் ஆயுதங்கள், மிருக எலும்பு ஆயுதங்கள் மற்றும் அணிகலன்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-8)

# உயர்கல்வி அமைச்சர் பதவி விலகவேண்டும்

## ஐ: தே. க. அறிக்கை

இசட் புள்ளி முறைமை தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புடன் உயர்கல்வி அமைச்சர் தமது பதவியில் இருந்து விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களுக்கு அமைய பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இசட் புள்ளி வெவ்வேறாக கணிக்கப்பட வேண்டும் என தமது கட்சி முன்னர் சுட்டிக்காட்டியிருந்தது.

இதற்கு அமைய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் தமது கட்சி மகிழ்ச்சி அடைந்துள்ளது.

இதேவேளை, இந்த வருடத்திற்கான உயர்தர பரீட்சைகள் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களே எஞ்சியுள்ள நிலையில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த தீர்ப்பின் பின்னர் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு அரசாங்கம் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்க போகிறது என அக்கட்சி கேள்வியெழுப்பியுள்ளது. (அ-2)

# 2012.06 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1358-துப்ரோவ்னிக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1801-கெய்ரோ நகரம் பிரித்தானியப் படையினரிடம் வீழ்ந்தது.

★ 1896-ஜப்பான், சன்ரிக்கு என்னுமிடத்தில் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 27,000 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1950-கொரியப் போரில் பங்குபற்றவென ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை அனுப்ப முடிபு செய்தது.

★ 1954-இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

★ 1954-உலகின் முதலாவது அணுக்கரு ஆற்றல் உற்பத்தி மையம் மொஸ்கோவுக்கு அருகில் ஒப்னின்ஸ்க் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது.

★ 1957- லூசியானா மற்றும் டெக்சாசில் நிகழ்ந்த சூறாவளியில் 500 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

★ 1967-உலகின் முதலாவது ஏரிஎம் (ATM) லண்டன் என்ஃபீல்டில் அமைக்கப்பட்டது.

★ 1974-அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்சன் சோவியத் ஒன்றியத்துக்கு பயணம் மேற்கொண்டார்.

★ 1977-சிபூட்டி பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.

★ 1979-முகமது அலி குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

★ 1991-சுலோவீனியா தனது விடுதலையை அறிவித்த இரண்டாம் நாளில் யுகோஸ்லாவியா அதன் மீது படையெடுத்தது.

★ 1998-கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.

★ 2007-டோனி பிளேயர் பிரதமர் பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து கோர்டன் பிறவுண் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.

### பிறப்புக்கள்

★ 1880-ஹெலன் கெல்லர் அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (இ. 1968)

★ 1922-அகிலன், தமிழில் ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர்.


★ 1927-டொமினிக் ஜீவா, ஈழத்தின் எழுத்தாளர், இதழாசிரியர்

### இறப்பு

★ 2009-இ.முருகையன்,ஈழத்துக்கவிஞர்

தென்மராட்சி கல்வயலில் பிறந்த முருகையன், ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களில் ஒருவர். ஏராளமான கவிதைகள், சில காவியங்கள், மேடை நாடகங்கள், வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். கொழும்பு, லண்டன், யாழ்.என தனது கல்வியைத் தொடர்ந்த இவர், முதுமாணி பட்டத்தை வெற்றார். இவரது இலக்கியப் பணியை பாராட்டி யாழ்.பல்கலைக்கழகம் கலாநிதி பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

ஹெலன் கெல்லர் மற்றும் ஆனி சலிவன்



**ஹெலன் கெல்லர் (Helen Keller)** புகழ்பெற்ற எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் விளங்கியவர். இவர் இளவயதிலேயே கண் பார்வை, கேட்கும் திறன், பேசும் திறன் ஆகியவற்றை இழந்தவர். ஹெலன் கெல்லர் அமெரிக்காவில் பிறந்தார். பிறக்கும் போது ஆரோக்கியமாகவே பிறந்தார். இவர் பிறந்து 19 மாதங்களில் ஏற்பட்ட கடும் காய்ச்சல் காரணமாக கண் பார்வை, கேட்கும் சக்தி, பேசும் சக்தி ஆகியவற்றை இழந்தார்.

தனது உணர்ச்சிகளை சரியான முறையில் வெளிப்படுத்த முடியாமல் தவித்த ஹெலன் கெல்லர் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்.

1887ஆம் வருடம் ஹெலன் கெல்லரின் பெற்றோர் அலக்ஸாண்டர் கிரகாம் பெல்லைச் சந்தித்தனர். அவர் அவர்களை பார்வையற்றோருக்கான பெர்கின்ஸ் பள்ளிக்கு அனுப்பினார். அங்கே ஆனி சலிவன் என்ற பெண்ணை ஹெலனின் ஆசிரியராக நியமித்தனர். அடுத்த 49 ஆண்டுகள் கெல்லரும் சலிவனும் ஒன்றாகவே கழித்தனர்.

ஹெலனுக்கு வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்க ஆனி எடுத்த முயற்சிகள் வியப்பை ஊட்டுபவை. W-A-T-E-R என்ற வார்த்தையின் பொருளை உணர்த்த வேகமாக தண்ணீர் வெளிவரும் குழாய்க்கு அடியில் ஹெலனின் கையை வைத்து குளிர்ந்த நீர் கையைத் தொட்டுச் செல்லும்போது W-A-T-E-R என்று மெதுவாக சொல்லியும் பின்னர் அவ்வார்த்தையை கையில் விரல்களால் எழுதிக் காட்டியும் புரிய வைத்தார்.

ஹெலன் கெல்லர் கண்பார்வையற்றோருக்கான பிரெயில் முறையில் ஆங்கிலம், பிரென்சு, ஜேர்மன், கிரேக்கம், லத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றார்.

1904ஆம் ஆண்டு சலிவனுடன் நியூயோர்க் சென்று அங்கிருந்து காது கேளாதோருக்கான ரைட்-ஹுமாஸன் பாடசாலையில் சேர்ந்தார்.

1900ஆம் வருடம் ராட்கிளிஃப் கல்லூரியில் சேர்ந்து 1904ஆம் வருடம் பட்டம் பெற்றார். கல்லூரியில் பட்டம் பெற்ற முதல் காது கேளாத, கண்பார்வையற்ற மனிதர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவாற்றலிலும் நெஞ்சுரத்திலும் சாதாரண மனிதர்களுக்கு சற்றும் சளைக்காதவரான கெல்லர், சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் உருவெடுத்தார்.

இவர் உழைப்பாளர் உரிமைகளையும் சோஷலிச தத்துவங்களையும் ஆதரித்து பல கட்டுரைகளும் புத்தகங்களும் எழுதினார். தன்பெயரிலேயே பார்வையற்றோர் நலனுக்காக இலாபநோக்கற்ற அமைப்பை ஏற்படுத்தினார். ஹெலன் கெல்லர், ஆன் சலிவனுடன் 39 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். ஊனமுற்றோர் நலனுக்காக தன் வாழ்நாள் முழுவதும் செலவிட்ட ஹெலன் கெல்லர், 1968ஆம் ஆண்டு தன் 87ஆவது வயதில் இறந்தார்.

# ராஜீவ் கொலை குற்றவாளிகளின் மரணதண்டனை இரத்தாக வேண்டும்

## சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

**இலங்கையில் தமிழீழம் அமைக்க வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக்கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் முதல் அரசியல் விழிப்புணர்வு மாநாடு கடலூரில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

தொடர்ந்து இனப்படுகொலை செய்யப்பட்டு வரும் ஈழத்தமிழர்களின் சிக்கலுக்கு தமிழீழம் அமைப்பதற்கான தேவையை வலியுறுத்தி அனைத்து கட்சி தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.

அதனை மத்திய அரசின் மூலமாக சர்வதேச நாடுகளுக்கு அனுப்பி ஆதரவு திரட்டப்பட வேண்டும். இதனை ஆதரிக்காத அரசியல் கட்சிகளை தமிழக மக்கள் புறக்கணிக்க வேண்டும். இத்தோடு ஈழத் தமிழர்களின் போரில் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கு காரணமாக இருந்ததில் ஒருவர் பிரணாப் மூகர்ஜி. இவரை வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழக அரசியல் கட்சிகள் தோற்கடிக்க வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளாக செங்கல்பட்டு பூவிருந்தவல்லி சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்களை தமிழக அரசு விடுதலை செய்திட வேண்டும்.

ஜனாதிபதி பிரதீபா பட்டேல் 35 பேரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்திருப்பது போன்று பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரது கருணை மனுக்களையும் பரிசீலித்து வாழ்நாள் தண்டனையாக குறைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதில் கட்சியின் நிறுவுனர் வேல் முருகன், தலைவர் பேராசிரியர் தீரன், மாநில பொது செயலாளர் காவேரி, இணை பொதுச் செயலாளர் போரூன் சண்முகம், அமைப்பு செயலாளர் தாரமங்கலம் காமரசு உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

(அ-2)

# குவைத்தில் 60 ஆயிரம் தினாருடன் இலங்கைப் பிரஜை தப்பியோட்டம்

## பொலிஸார் வலைவீச்சு

சுமார் 60 ஆயிரம் குவைத் தினார் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக குவைத்தில் சாரதியாக பணிபுரியும் இலங்கை பிரஜை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்து குவைத் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரு ஊழியர்கள் பணியாற்றிய 5 இலட்சத்து 70 ஆயிரம் தினார் பணம் இருந்த கார் ஒன்று தொடர்பாடல் வர்த்தக நிலையங்களில் பணம் வசூலித்துவிட்டு குவைத் விமான நிலைய தொடர்பாடல் வர்த்தக நிலையத்தில் பணம் வசூலிக்க சென்றுள்ளது.

காரில் இருவர் பணியாற்றியுள்ளனர். ஒருவர் இலங்கையை சேர்ந்த சாரதி. மற்றையவர் பணம் வசூலிப்பாளர். விமான நிலையத்திற்கு முன்புறம் காரை நிறுத்தி விட்டு சாரதியை பாதுகாப்புக்காக அமர்த்தி விட்டு பணிப்பாளர் பணம் வசூலிக்க சென்றுள்ளார். காரில் குறித்த தினார் பணம் இருந்துள்ளது.

பணம் வசூலித்து திரும்பிய ஊழியர் அதிர்ச்சியடைந்தார். அதற்குக் காரணம் காரும் சாரதியும் திடீரென காணாமல் போனமையாகும். பின்னர் தனது நிறுவன அதிகாரிகளுக்கு தகவல் வழங்கி அதன்மூலம் குவைத் விமான நிலைய பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

காரையும் சாரதியையும் கண்டுபிடிக்க முடியவில்லை. செய்மதி ஊடாக கண்டுபிடிக்க முயற்சித்த போதும் அது கைகூடவில்லை. அதன் பின்னர் கார் ஒரு மறைவான இடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது காரில் இருந்த குறித்த பணத்தில் குவைத் தினார் காணாமல் போயுள்ளமை தெரியவந்தது.

இலங்கை சாரதியான அப்துல் அமீர் பணத்துடன் தப்பிச் சென்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் நிலையில் குவைத் பொலிஸார் அவரை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(அ-2)

# உயிர்நீத்த படைவீரர்களின் ஓய்வூதியம் அதிகரிக்கப்படும்

## கோத்தபாய தெரிவிப்பு

உயிரிழந்த படைவீரர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த படைவீரர்களின் மனைவியர் அல்லது பெற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியக் கொடுப்பனவு 25 வீதத்தால் உயர்த்தப்படவுள்ளது. பொலிஸ் மற்றும் முப்படையினருக்கு தேவையான சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. போரில் உயிரிழந்த, ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இதுவரையில் 35 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற உயர் படையதிகாரிகளுக்கு வெளிநாட்டு தூதுவராலயங்களில் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. படைவீரர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் நோக்கில் இவ்வாறான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# கணனி வன்பொருள் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் கணனி வன்பொருள் (Computer Hardware) பயிற்சி நெறி நடைபெறவுள்ளதாக மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியினை பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) வரை கல்வி கற்றிருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாளஅட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றுடன் சுயமாக தயாரித்த விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட முகாமையாளர், NAITA (நைற்றா) இல. 7 கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

(அ-9)

# 359 கிலோ வெடிபொருள் பவுடர் முள்ளிவாய்க்காலில் மீட்பு

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 359 கிலோகிராம் நிறையுடைய சீ 4 ரக வெடி பொருட்கள் மற்றும் வெடிபொருள் பவுடரை வவுனியா பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படும் வெடிபொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட வெடி பொருட்களில் சீ 4 ரக வெடி பொருட்கள் 30 கிலோ கிராமும் அதனை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் சீ 4 ரக வெடிபொருட்பவுடர் 329 கிலோகிராமுமே கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-2)

# குப்பைக்கு மூட்டிய தீயால் குடிசைகள் எரிந்து நாசம்

## தங்கபுரத்தில் சம்பவம்

முல்லைத்தீவு அலம்பில் தங்கபுரம் பகுதியில் திடீர் தீ விபத்தில் 4 குடிசைகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன. இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் வசிக்கும் ஒருவர் சூழலை சுத்தப்படுத்தி குப்பைகளை எரிக்க தீ மூட்டிய போது அத் தீ குடிசைகளுக்கும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தீ விபத்தில் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# கழிவு வாய்க்காலை புனரமைக்க கோரிக்கை

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள புன்னை நீராவி கிராம சேவகர் பிரிவில் உள்ள பிரமந்தனாறு வீதிக்கு மேற்கு பக்கமாகவுள்ள கழிவுஆறு வாய்க்கால் புனரமைக்கப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

குறித்த இக்கழிவு ஆறு ஒழுங்கான முறையில் புனரமைக்கப்படாமையால் சுகாதார சீர்கேடு இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் டெங்குநோய் பரவும் அபாய நிலை உள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இக்கழிவு நீர் ஆற்றை புனரமைத்து உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-264)

# முத்துமாரி அம்பாள் மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவு வேப்பந்திடல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய புனருத்தாரண அஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ பிரதிஸ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.05 மணி தொடக்கம் 10.43 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

(அ-9)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 170

## பெர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்

நடவடிக்கையின் மூன்றாவது நாளாகிய ஏப்ரல் 18 ஆம் திகதி சேனையின் முக்கிய தாக்குதல் படைத்திரட்டின் துருப்புகள் போகும் போக்கில் ஷ்பிரேயே ஆற்றைக் கடந்து, பகுதியளவு சக்திகளைக் கொண்டு எதிரியின் மூன்றாவது தற்காப்பு மண்டலத்தை உடைத்தன. பாசிஸ்டுகளுக்கு பெரும் ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. சேனையின் டாங்கிப் படைகள் எதிரியின் பெர்லின் படைத் திரட்டைச் சுற்றிவளைக்கும் நோக்கத்தோடு வடமேற்குத் திசையில் தொடர்ந்து முன்னேறின. நடவடிக்கையின் நான்காவது நாளன்று முதலாவது உக்ரேனிய சேனை, போர் முனை பூராவும் நேய்சே தற்காப்பு எல்லையைப் பிளந்து எதிரியின் தற்காப்பினுள் 50 கி.மீ. ஆழம்வரை உட்புகுந்தது.

2-வது பைலோருஷ்ய சேனையின் போர் நடவடிக்கைகள் இரண்டு நாட்கள் கழித்து ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பமாகியது. இரண்டு நாட்களில் இத்துருப்புகள் ஒஸ்த் ஒதெர் ஆற்றைக் கடந்தன, ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியை எதிரியிடமிருந்து விடுவித்தன, வெஸ்த் ஒதெர் ஆற்றின் கிழக்கு கரையின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஆரம்ப நிலையை மேற்கொண்டன. இதன் மூலம் இவை பாசிஸ்டுகளின் 3-வது டாங்கிப்படை சக்திகளைக் கட்டிப் போட்டன. 1-வது பைலோருஷ்ய சேனையின் தாக்குதல்களின் கீழ் தோல்வியைத் தழுவி வந்த 9-வது படைக்கு உதவியாக இந்த 3-வது டாங்கிப்படையை பாசிசப் படைத் தலைமை அனுப்ப இயலாமல் செய்யப்பட்டது.

ஒதெர்-நேய்சே தற்காப்பு எல்லையைப் பிளந்ததும், 1-வது பைலோருஷ்ய சேனையின் முக்கிய தாக்குதல் படைத்திரட்டின் துருப்புகள் வடகிழக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும், 1-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் தெற்கிலிருந்தும் தென் கிழக்கிலிருந்துமாகத் தொடர்ந்து பெர்லினை நோக்கி முன்னேறின. ஏப்ரல் 20,21 திகதிகளில் 1-வது பைலோருஷ்ய சேனையின் துருப்புகள் பெர்லின் வெளி தற்காப்பு வளையத்தைப் பிளந்து கொண்டு புறநகர் பகுதியில் நுழைந்தன. "உயர்மட்டப் படைத்தலைமையின் மேல்மட்டங்களைப் பொறுத்த



பிரேக் (செக்கோஸ்லொவாக்கியாவின் நகரில்) இல் சோவியத் அணி சாவடைந்த எதிரிபடையினரைக் குவித்துள்ளனர்

மட்டில் ஜேர்மனிய இராணுவம் மடிந்து வீழ்வதன் கடைசிக் காட்சி தொடங்குகிறது... எல்லாமே அவசர அவசரமாக நடைபெறுகின்றன, ஏனெனில் ருஷ்ய டாங்கிகள் சுடுவது தொலை தூரத்திலிருந்து காதில்

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்



ஜேர்மனியப் படையில் இணைந்த பெண் சத்தியப்பிரமாணம் செய்கின்றாள்

விழுகிறது... மோசமான ஒரு மனநிலை நிலவுகிறது" என்று ஏப்ரல் 20 ஆம் திகதி வேர்மஹிடின் உயர்மட்ட பிரதானப் படைத்தலைமையின் நாட்குறிப்பில் எழுதப் பட்டிருந்தது.

1-வது உக்ரேனிய சேனையின் படைப் பிரிவுகளும் தெற்கிலிருந்து பெர்லினை அடைந்தன. பாசிஸ்டுகள் தமது தலைநகரம் சுற்றி வளைக்கப் படாமல் இருப்பதற்காக எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். ஏப்ரல் 22 ஆம் திகதி நடுப்பகலுக்குப்பின் பேரரசின் காரியாலயத்தில் கடைசி அவசரக் கூட்டம் நடைபெற்றது. இதில் கைடல், யோடல், போர்மன், கிரேப்ஸ், இன்னும் சிலர் கலந்துகொண்டனர். மேற்குப் போர் முனையிலிருந்து எல்லா துருப்புகளையும் அகற்றி அவற்றை பெர்லினுக்காக நடைபெறும் சமரில் ஈடுபடுத்த வேண்டும் என்ற யோடலின் ஆலோசனையை ஹிட்லர் ஒப்புக் கொண்டான். இதன் தொடர்பாய் எல்பா ஆற்றில் தற்காப்பு நிலையிலிருந்து ஜெனரல் வேன்கெயின் 12-வது படைக்கு கிழக்கு நோக்கி திரும்பி, 9-வது படையுடன் சேருவதற்காக பெர்லினை நோக்கிச் செல்லுமாறு கட்டளையிடப் பட்டது. அதே நேரத்தில் எஸ்.எஸ். ஜெனரல் ஷ்டைனரின் தலைமையில் தலைநகரத்துக்கு வடக்கே செயற்பட்ட ஆர்மித் தொகுதி வடக்கேயிருந்தும் வடமேற்கேயிருந்துமாக அதைச் சுற்றி வந்து சோவியத் படைத் திரட்டின் பக்கவாட்டில் தாக்க வேண்டும்.



சோவியத்திடம் சரணடைந்த ஜேர்மன் அதிகாரிகள்

12-வது படையின் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்வதற்காக பீல்ட்மார்ஷல் கைடல், வேன்கெயின் படைத் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டான்.

ஏப்ரல் 23,24 இல் எல்லாத் திசைகளிலும் போர் நடவடிக்கைகள் உக்கிரமாக நடைபெற்றன. சோவியத் துருப்புகளின் முன்னேற்ற வேகங்கள் சிறிதளவு குறைந்த போதிலும் பாசிஸ்டுகளால் இவற்றைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. தனது படைத் திரட்டு சுற்றிவளைக்கப்பட்டு பிளக்கப்படுவதைத் தடுக்க எண்ணிய பாசிச படைத் தலைமையின் திட்டம் குலைக்கப் பட்டது. ஏப்ரல் 24 ஆம் திகதி 1-வது பைலோருஷ்ய சேனையின் 8-வது கார்டு படையும் 3-வது, 69-வது படைகளும் பெர்லினுக்குத் தென் கிழக்கே 1-வது பைலோருஷ்ய சேனையின் 8-வது கார்டு படையும் 3-வது, 69-வது படைகளும் பெர்லினுக்குத் தென்கிழக்கே 1-வது உக்ரேனிய சேனையின் 3-வது கார்டு டாங்கிப்படை, 28-வது படை ஆகியவற்றுடன் இணைந்தன. இதன் மூலம் இவை எதிரியின் 9-வது படையை பெர்லின் படைத் திரட்டிலிருந்து துண்டித்து அதே நேரத்தில் சுற்றிவளைத்தன.

(தொடரும்)

# அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் அரசியல்வாதிகள் பொய் கூறுகின்றனர்

## சபாநாயகர் தெரிவிப்பு

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சில அரசியல்வாதிகள் பொய் சொல்கிறார்கள். எமது மக்கள் இந்தப் பொய்களைக் கேட்டு ஏமாற்றமடைவதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யட்டியாந்தோட்டை பகுதியில் சிரேஷ்ட அரசியல் தலைவர் என். எம். பெரேராவின் உருவச் சிலை அங்குரார்ப்பணம் செய்து உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,என்.எம். பெரேரா நாட்டின் மிக முக்கியமான ஓர் அரசியல் தலைவர். தற்போதைய அரசியல்வாதிகளுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றார்.தமிழ், சிங்கள, மொழிகளின் மூலம் கரும மாற்றக்கூடிய வகையில் பொதுவான மொழிக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

இந்தத் திட்டத்தை அமுல்படுத்தியிருந்தால் 30 ஆண்டுகால போர் ஏற்பட்டிருக்காது. பாடசாலை சிறுவர்களுக்கு பகல் உணவு வழங்கப்பட வேண்டும் என்கிறார். (அ-2)

# போரின்போது கணவனை இழந்த பெண்களுக்கு மலேசியா நிதியுதவி

இலங்கையின் வடக்கு கிழக்கில் போரின் போது விதவைகளான பெண்களுக்கு மலேசிய அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இந்த நிதி மலேசிய தமிழ்ப்பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கில் கணவன்மாரை இழந்த ஆயிரத்து 700 பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக நியூ ஸ்ரெய்ட் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

மலேசியாவின் எல்லைக்குள் துறை பிரதியமைச்சர் எம்.சரவணன் இந்த நிதியை நேற்று முன்தினம் கையளித்தார். இது சிறிய தொகை நிதியாக இருந்தாலும் சிறந்த ஆரம்பம் என்று நிகழ்வின் போது அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மலேசிய தமிழ்ப்பேரவையின் பணிப்பாளர் எஸ்.பி.பதி உரைநிகழ்த்துகையில், இலங்கையின் வடக்கு கிழக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்து 700 பெண்களின் சிறிய பொருளாதார முயற்சிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தத் திட்டத்தை முன்னெடுத்து செல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட மலேசிய அரசாங்கம், தொண்டர்களையும் அனுப்பி வைக்கவுள்ளதாக பிரதியமைச்சர் சரவணன் குறிப்பிட்டார். (அ-2)

# அமெரிக்காவிடம் ஆவணம் எதுவும் வழங்கவில்லை

## மீண்டும் மறுக்கிறது அரசாங்கம்

அமெரிக்காவிடம் எந்தவிதமான யோசனைத் திட்டமும் ஒப்படைக்கவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந்த போது அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனிடம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரை அமுல்படுத்தல் தொடர்பான ஆவணமொன்று ஒப்படைக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆங்கில ஊடகமொன்றிலும் இது பற்றிய தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் இவ்வாறான எந்தவொரு ஆவணத்தையும் அமெரிக்காவிடம் வழங்கவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மீண்டும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு விஜயம் செய்த இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் தாம் ஓர் ஆவணத்தை தயாரித்ததாகவும் அந்த ஆவணம் பற்றிய தகவல்களே அண்மையில் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். ஆயினும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஜுலை மாதம் நடுப்பகுதி அளவில் இந்த இறுதி அறிக்கை பரிந்துரைகளை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ரயர் களஞ்சியசாலையில் பாரிய தீவிபத்து

கல்கிசையிலுள்ள ரயர் களஞ்சியசாலையில் ஏற்பட்ட பாரிய தீ விபத்து காரணமாக ஒருவர் பலியானதுடன் 3 பேர் காயமடைந்துள்ளனர்.இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தத் தீ விபத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர். தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தெஹிவளை கல்கிசை மாநகரசபையின் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். (அ-2)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கொத்தமல்லியும் கொத்தமல்லிக்கீரையும்

**Botanical Name- Coriandrum sativum**
**Family-Umbe**
**Engl- Coriander**
**Sinh-Kottamalli**

15-45 சென்ரிமீற்றர் உயரமுடைய செடியாகும். இவைகள் பிளபுபட்டிருக்கும் . பிளபுபட்ட அடியிலை நுனியைவிட அகலமாக இருக்கும். ஒழுங்கான, இருபாலான சிறிய பூக்கள், வெள்ளைநிறமானது. சிறிய கோளவடிவ பழங்கள். பூக்களை ஆடி மாதத்தில் காணலாம். விதைத்து 3 முதல் 6 வார வயதுடைய செடிகள் கீரையாக பயன்படுத்தப்படுகின்றது.

கரிசல் வகை மண்ணுக்கு ஏற்றது இந்தப்பயிர். கொத்துமல்லி (புதிய) விதைகளை இரண்டாகத்தட்டி பாத்திகளில் போடுவதால் நமது வீட்டுத் தோட்டங்களிலேயே கொத்தமல்லிக் கீரையை வளர்த்துக்கொள்ளலாம்.



**100 கிராம் கொத்தமல்லிக் கீரையிலுள்ள சத்துக்கள்.**

புரதம்-3.3 கிராம்
கொழுப்பு-0.6 கிராம்
நார்ப்பொருள்-1.2 கிராம்
காபோவைதரேற்று-6.3 கிராம்
கல்சியம்-184 மில்லிகிராம்
பொஸ்பரஸ்-71 மில்லிகிராம்
இரும்பு-18.5 மில்லி கிராம்
உயிர்ச்சத்து சி-135 மில்லி கிராம்
மகனீசியம்-64 மில்லி கிராம்
சோடியம்-58.3 மில்லி கிராம்
பொட்டாசியம்-256 மில்லி கிராம்
கரோட்டின்-6918 மைக்ரோகிராம்

**100 கிராம் கொத்தமல்லி விதையிலுள்ள சத்துக்கள்**

புரதம்-14.1 கிராம்
கொழுப்பு-16.1 கிராம்
நார்ப்பொருள்-32.6 கிராம்
காபோவைதரேற்று-21.6 கிராம்
கல்சியம்-630 மில்லிகிராம்
பொஸ்பரஸ்-39.3 மில்லிகிராம்
இரும்பு-17.9 மில்லி கிராம்
போலிக்கமிலம்-327 மில்லிகிராம்
பொட்டாசியம்-996 மில்லி கிராம்
கரோட்டின்-942 மைக்ரோகிராம்

**மருத்துவ குணங்கள்**

✦ கொத்தமல்லிக்கீரையும் விதையும் மருந்துக்கு உதவுகின்றன. நிறைந்த மணமும் சற்று காரத்தையும் கொண்ட கொத்தமல்லிக் கீரை நரம்புகளுக்கு நல்ல வலுவைத் தரும். நரம்பு தளர்ச்சியைப் போக்கும். என்புகளுக்கும் சக்தியைத் தரும். இரத்தத்தை விருத்தி செய்யும். ஜீரண சக்தியை அதிகரிக்க உதவும்.

✦ இதன் இலையை எண்ணெய் விட்டு வதக்கி வீக்கம், கட்டிகளுக்கு கட்ட அது விரைவில் கரைந்து குணமாகும்.

✦ கொத்தமல்லி இலைச்சாற்றுடன் (ஒரு தேக்கரண்டி) மருத்துவவாழை விதை 2 அல்லது 3 எடுத்து பொடித்து கலக்கி அருந்த அம்மை கொப்பளங்கள் தணியும்.

✦ ஒரு டம்ளர் மோரை (200 மில்லி) 2 தேக்கரண்டி கொத்தமல்லி இலைச்சாற்றை கலக்கி அருந்த வாய்க்கசப்பு, வாந்தி உண்டாதல் போன்றவை தீரும்.

✦ கொத்தமல்லி இலைச்சாற்றை நெற்றியில் தடவ தலைவலி, ஒற்றைத்தலைவலி தீரும்.

✦ முகப்பரு, சிறுகட்டிகள் முதலியவைநீங்குவதற்கு கொத்தமல்லி இலைச்சாற்றுடன் மஞ்சள் தூளை கலக்கி குழைத்து இரவில் படுக்குமுன் பூசி வர வேண்டும். முகத்தின் தோலும் மென்மையாகும். அழகும் அதிகரிக்கும்.

✦ கொத்தமல்லிபூவை சமைத்து சாப்பிட உஷ்ணம் நீங்கும். உடல் களைப்பு நீங்கி சுறுசுறுப்படையும்.

✦ இலைகளைதுள்களாகஅரைத்துமோரில் போட்டு கோடை காலத்தில் அருந்தினால் உடல் உஷ்ணத்தை நீக்கி பசியை உண்டாக்கும்.

✦ பச்சையாக இலையைப்போட்டு மென்று உண்பதால் வாய்த்துர்நாற்றம் நீங்கும்.

✦ துவரம்பருப்பு, தேங்காயுடன் கொத்தமல்லி கீரையை சேர்த்துரைத்து துவையலை நெய் சேர்த்து சோற்றுடன் உண்டுவர நாக்குப் புண்ணும் வயிற்றுப்புண்ணும் வாய்ப் புண்ணும் நீங்கும்.

✦ கொத்தமல்லி முதிர்ந்த காய்கள் உருண்டையாக இருக்கும். சம அளவில் வறுத்த உள்ளியுடன் வறுத்த கொத்தமல்லியையும் எடுத்துப் பொடி செய்து தேனும் பாலும் கலந்து அருந்திவர நரம்பை பலப்படுத்தும்.

✦ கொத்தமல்லிவிதை இறைப்பையில்உண்டாகும் வாயுவை அகற்றும் மருந்துகளில் சேர்க்கப்படுகின்றது. விதையை வாயிலிட்டு மெல்ல வாய்த்துர்நாற்றம் போகும்.

✦ பொன் வறுவலாக வறுத்த குரக்கன், கொத்தமல்லி, வேர்க்கொம்பு முதலியவற்றை பொடித்து கோப்பி போல கசாயம் தயாரித்து பால் சேர்த்து பனைவெல்லம் அல்லது சீனி கலந்து அருந்த மூல நோய் தீரும். உடலிற்கு பலத்தை கொடுக்கும்.

✦ ஒரு தேக்கரண்டி கொத்தமல்லிக் கீரையை ஊறவைத்து அதனுடன் ஒரு துண்டு இஞ்சி, ஒரு வெல்லம் சேர்த்து மைபோல அரைத்து ஒரு தேக்கரண்டி நெய்யில் வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட பித்தம், அஜீரணம், தலைச்சுற்றல் நீங்கும்.

✦ கொத்தமல்லியோடு (விதை) மஞ்சளும், மிளகும் சேர்த்து குடிநீர் காய்ச்சி குடித்தால் (30-60 மில்லி) காய்ச்சல் தணியும். அதாவது சம அளவு சரக்குகள் எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 ஆக வற்றக்காய்ச்சி எடுக்கவும்.

✦ கொத்தமல்லியுடன் (விதை) சீரகம், மஞ்சள் சேர்த்து குடிநீர் காய்ச்சி அருந்தினால் பித்தம் சம்பந்தமான நோய்கள் தணியும்.

✦ கொத்தமல்லி விதை சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்தி பொடியாக்கி (மூழ்க சாறுவிடவேண்டும்) தினமும் காலை, மாலை 2 கிராம் அளவு சாப்பிட கொழுப்பு குறையும். இரத்த அழுத்தமும் சீராகும்.

✦ கொத்தமல்லி விதைச்சாற்றில் கருஞ்சீரகத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் 1-2 கிராம் அளவு தேனில் குழைத்து காலை, மாலை சாப்பிட மாதவிலக்கு கோளாறுகள் குணமாகும்.



✦ கொத்தமல்லிச் சாற்றில் பெருஞ்சீரகம், ஓமம் இரண்டையும் ஊறவைத்து உலர்த்தி பொடித்து தினமும் உணவுக்கு முன் 2 கிராம் அளவு சாப்பிட்டால் நன்றாகப் பசியெடுக்கும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம் கைதடி**

✦ கொத்தமல்லிச் சாற்றில் சுக்கைக் குழைத்து நெற்றியில் பற்றுப்போட தலைப் பாரம் குணமாகும்.

✦ கொத்தமல்லியை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் தோல் வியாதிகள் வராமல் தடுக்கலாம்.

✦ கொத்தமல்லியை பசும்பால் விட்டரைத்து முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மீது தடவினால் அவை விரைவில் மறையும்.

✦ கொத்தமல்லிச்சாறு, புதினாச்சாறு, துருவிய வெள்ளரிக்காய் மூன்றையும் கலந்து முகத்தில் பூசிவந்தால் கறுப்பு நிறம் மாறி முகம் பொலிவு பெறும்.

✦ கொத்தமல்லி, சீரகம் சம அளவு எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 ஆக வற்றக் காய்ச்சி 30 மில்லி காலை, மாலை அருந்த தலைப்பாரம், தலைவலி குணமாகும்.

✦ கொத்தமல்லிச்சாறு, பூண்டுச்சாறு, வெங்காயச்சாறு மூன்றையும் சம அளவு எடுத்து தேன் சேர்த்து கொதிக்க வைத்து இறக்கவும். பின்னர் இதில் தினமும் காலை, மாலை இருவேளை 30மில்லி சாப்பிட்டு வந்தால் இதயம் பலப்படும். இதய நோயாளிக்குச் சிறந்ததாகும்.

# ஏழு சிறுவர்கள் சேர்ந்து அடித்ததில் இலங்கையர் பலி

## பிரிட்டனில் பரிதாபம்

(லண்டன்)

பிரித்தானியாவில் இளைஞர்கள் சிலரின் தாக்குதலுக்கு இலக்காகி இலங்கை தமிழ் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவர் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தாக்கி விடுவிக்கப்பட்டதன் பின் 1993 ஆம் ஆண்டு தஞ்சம் கோரி ஜேர்மனியில் குடிபெயர்ந்தார்.

இவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். கடந்த 9 ஆம் திகதி லீசெஸ்டர் பகுதியில் ஏற்பட்ட மோதலில் 13 வயது முதல் 15 வயது வரையுள்ள ஆறு சிறுவர்களும் 14 வயதுள்ள ஒரு பெண்ணும் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதில் பலத்த காயமடைந்த குறித்த நபர் சிகிச்சை பலனின்றி கடந்த வாரம் உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக லீசெஸ்டர் பகுதி பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்து ஏழு பேரை கைது செய்துள்ளனர்.

இவர்கள் ஏழு பேரும் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த கொலைப் பின்னணி குறித்து அவரின் மனைவி மற்றும் பெற்றோரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(அ-2)

# பேஸ்புக் இணையம் குறித்து இதுவரை 360 முறைப்பாடுகள்

பேஸ்புக் இணையம் குறித்து இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 360 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென இலங்கை கணனி அவசர செயற்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

முறைப்பாடுகளில் அதிகமானவை போலி பேஸ்புக் கணக்குகள் தொடர்பானவை என அப்பிரிவின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக பேஸ்புக் கணக்கில் பலாத்காரமாக உள்நுழைதல் குறித்தும் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால் பேஸ்புக் கணக்கு வைத்திருக்கும் பாவனையாளர்கள் தங்களுடைய கணக்குகளை பாதுகாப்பாக பேண வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# மாணவர்களின் கல்வியை சீர்குலைத்த உயர்கல்வியமைச்சர் பதவி விலக வேண்டும்

## இலங்கை ஆசிரியர் ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டுமென நாட்டின் சில முக்கிய ஆசிரிய தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மாணவர்களின் கல்வியை சீர்குலைத்த அமைச்சர் தொடர்ந்தும் பதவி வகிக்க அனுமதிக்க கூடாது என இலங்கை ஆசிரியர் ஒன்றியத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் பிழையானவை என பெற்றோர் மாணவர்கள் மற்றும் ஏனைய அனைவரும் குற்றம் சுமத்திய போதிலும் கல்வி அமைச்சர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

மூன்று இலட்சம் மாணவர்களின் வாழ்க்கையுடன் கல்வி அமைச்சு விளையாடியுள்ளது.

மாணவர்களின் உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் மாணவர்களின் உரிமையை மீறிச் செயற்பட்ட அமைச்சர் தொடர்ந்தும் பதவி வகிப்பது நியாயமாகுமா? 2 இலட்சத்து 94 ஆயிரம் மாணவர்கள் உயர்தர பரீட்சைக்கு தோற்றியதாகவும் இதில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் விடைத்தாள் மீள்மதிப்பீட்டிற்காக 750 ரூபா செலுத்தி விண்ணப்பம் செய்துள்ளனர்.

எனவே, மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பாரியளவில் அழுத்தங்களை பிரயோகித்த அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றார். (அ-2)

# நியாயமான விலையில் முட்டை தேடி அலையும் அதிபர்கள்

(மல்லாவி)

உலக உணவுத்திட்டத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவில் முட்டையும் சேர்க்கப்பட வேண்டும் என்ற அரசின் திட்டத்திற்கமைய எட்டு ரூபா விலையில் முட்டையை தேடி வன்னிப்பாடசாலை அதிபர்கள் அலைவதை காணமுடிகின்றது.

இது தொடர்பாக தெரிய வருவது மாணவர்கள் உடல் ஆரோக்கியமாக வளர வேண்டும் என்பதற்கு அமைய உலக உணவுத்திட்டம் மூலம் வழங்கப்படும் மதிய உணவுடன் மாணவர்களுக்கு முட்டையும் பாலும் வழங்க வேண்டுமென அரசாங்கத்தால் அறிவிக்கப்ப ட்டுள்ளது.

முட்டை கொழும்பு விலையான எட்டு ரூபா விற்கே அனைத்து இடங்களிலும் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

வன்னியில் போர் நடவடிக்கை மூலம் விவசாயத்துடன் இணைந்த விலங்கு வேளாண்மையும் அழிவடைந்துள்ள நிலையில் இங்கு முட்டை ஒன்றின் விலை 14 ரூபா முதல் 17 ரூபா வரை விற்கப்படுகின்றது.

இந்நிலையில் முட்டையினை எட்டு ரூபாவிற்கு கெள்வனவு செய்ய முடியாதுள்ளது. எனவே, இது தொடர்பாக விலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி தருமாறு பாடசாலை அதிபர்கள் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன கல்வித்துறைசார் அதிகாரிகள் ஊடாக தமது கோரிக்கை ஒன்றினை உரிய தரப்பினருக்கு முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# தனிநாடு தொடர்புடைய தீர்வுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்

## அமைச்சர் சம்பிக்க விடாப்பிடி

(கொழும்பு)

பிரிவினைவாத சதிகாரர்களின் பேச்சுக்களைக் கேட்டு மீண்டும் தமிழ் மக்கள் அழிவுகளை தேடிக் கொள்ளக்கூடாது.ஏனெனில் உள்நாட்டில் தனிநாட்டுக் கொள்கைகளுக்கோ தீர்வுகளுக்கோ இனி ஒருபோதும் இடமில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழத்திற்காக இந்தியா குரல் கொடுத்தால் இலங்கையில் பேரழிவுகளே ஏற்படும் இதற்கு உள்நாட்டில் வாழும் தமிழ் மக்களும் ஏமாறக் கூடாது ஈழம்பெற தமிழகமும் முயற்சிக்க கூடாது.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று இந்தியா உட்பட ஏனைய சர்வதேச நாடுகளுக்கு பலமுறை கூறியும் கேட்டபாடில்லை.


எனவே, இதற்கு எதிராகவும் நடவடிக்கைகள் முன்னெடுப்பது அவசியமாகும். எவ்வாறாயினும் கருணாநிதி, சீமான், வைகோ போன்றவர்களின் விருப்பங்கள் இலங்கையில் ஈடேறாது. அவர் தெடர்ந்தும் கூறுகையில்,

எனக்கு எதிராகக கடந்த வாரத்தில் தமிழகத்தில் பரிய எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனை வைகோ, சீமான் மற்றும் கருணாநிதி போன்றவர்கள் முன்னெடுத்தனர். இவர்கள் இலங்கையின் சுயாதீன தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலேயே செயற்படுகின்றனர்.

இலங்கை பிரச்சினை எனக்கூறி சர்வதேச புலிகளிடமிருந்து நிதிகளை பெற்றுக் கொண்டு அவர்கள் உள்நாட்டு அரசியலில் இருப்பதை தேடிக் கொள்கின்றனர்.

இந்தியாவில் முன்னெடுக்கப்படுகின்ற எவ்வகையான போராட்டத்திற்கும் அஞ்சப் போவதில்லை. அதேபோன்று உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதையும் அனுமதிக்கப்போவதில்லை. புலிப்பயங்கரவாதிகளின் தமிழீழக் கனவை நனவாக்கி கொள்ளவே தமிழ் நாட்டின் ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சிக்கின்றனர். இதற்கு ஒரு போதும் ஜாதிக ஹெல உறுமய இடமளிக்காது என்றார்.

(அ-2)





யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தினதும் Allince francaise யாழ்ப்பாணக்கிளையின் ஏற்பாட்டில் எனது தரிசனங்கள் புகைப்படக் கண்காட்சி அண்மையில் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெற்றது. கண்காட்சியினை பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பிரபல படப்பிடிப்பாளர் டொறத்தி சூஸ் நாடா வெட்டி திறந்து வைப்பதையும் கண்காட்சியினை பார்வையிடும் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இல. அரசை கவிழ்க்குமா அமெரிக்க அழுத்தம்?

எவர் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் நமது விருப்பங்களின் எல்லைகளுக்கு அப்பால், சில சர்வதேச சக்திகள் இருக்கின்றன. அவ்வாறான சக்திகளின் விருப்பங்கள், 'தேவைகள் எதிர்பார்ப்புகளுக்கேற்றவாறே பெரும்பாலான விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு நாட்டின் மீதான சர்வதேச ஈடுபாடு என்பது அந்த நாடு அமைந்திருக்கும் புவியியல் பரப்பு அதன் கேந்திர முக்கியத்துவம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகிறது.

1987 இல் இடம்பெற்ற இந்தியாவின் தலையீடு இதற்கு சிறந்த உதாரணமாகும். அப்போதைய அரசாங்கத்தின் தலைவரான ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் விருப்பங்களின் எல்லைகளுக்கப்பால் அது தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தலையீட்டை ஏற்றுக்கொள்வதைத் தவிர அப்போதைய ஆட்சியாளர்களுக்கு வேறு தெரிவுகள் இருந்திருக்கவில்லை. அதாவது, சர்வதேச சக்திகளின் அரசியல் சூத்திரம் மிகவும் இலகுவானது-ஏற்றுக்கொள்! இல்லாவிட்டால், ஏற்றுக்கொள்ளச் செய்யப்படுவாய்!!- இந்தியத் தலையீட்டை எண்ணிப் பார்க்கும் ஒருவர், இந்த எளிய சூத்திரத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

இங்கையின் மீதான சர்வதேச தலையீடுகளை கவனமாக நோக்கினால், இத்தகையதொரு சூத்திரத்தை ஒருவர் தெளிவாகக் காணலாம். நவீன இலங்கை அதன் மீதான சர்வதேச தலையீட்டின் மூன்றாம் பாகத்தை தற்போது எதிர்கொண்டிருக்கிறது. இதன் முதலாவது பாகம் இந்திய தலையீடாக அமைந்தது: இலங்கையின் கேந்திர முக்கியத்துவமும் அதன் மீதான இந்திய ஈடுபாடும்தான் இந்தியா அப்போது இலங்கை மீது நேரடியாக தலையீடு செய்வதற்கான காரணமாக அமைந்தது. அதன் பிற்கால விளைவுகள் என்ன என்பதை இங்கு விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. விடுதலைப்புலிகள் மிகவும் பலம் பொருந்திய ஆயுத அமைப்பாக இருந்த காலத்தில் இலங்கை மீதான சர்வதேச தலையீட்டின் இரண்டாம் பாகம் நிகழ்ந்தேறியது. இதன்போது இலங்கையின் மீதான தலையீடு பிராந்தியம் என்ற நிலையிலிருந்து சர்வதேச தலையீடு என்ற புதிய பரிமாணத்தை எடுத்தது.

இந்தியாவின் தலையீடு விடுதலைப்புலிகளால் தோற்கடிக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் இந்தியாவின் தலையீட்டை தோற்கடித்ததன் மூலம் ஈழத்தமிழர் அரசியல் என்பதே இந்தியாவின் நலன்களுக்கு எதிரான ஒன்றுதான் என்னும் தோற்றப் பாட்டை உருவாக்கினார்கள். இந்தியாவும் பெரும்பாலும் அத்தகைய ஒரு முடிவிற்கே வந்திருந்தது; இந்தியா இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு காரணமாக இருந்தது; பின்னர் இந்திய ஆதரவு அமைப்புகளைத் தடைசெய்தது, ஆகிய காரணங்களால் விடுதலைப் புலிகள் இந்தியாவின் நிரந்தர எதிரியானார்கள். பின்னர் ராஜீவ் காந்தி கொலை இடம்பெற்றது. இதன் பின்னர் இந்தியாவைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகள் எக்காலத்திலும் மன்னிக்கமுடியாத எதிரியானார்கள். இது ஒருவகையில் அமெரிக்கா பின்லேடனையும் அவரது இயக்கத்தையும் குறித்து, கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கு ஒப்பானதாகும்.

இதனை விடுதலைப்புலிகள் தொடர்பாக நூல் எழுதிய நாராயண சுவாமியின் வார்த்தையில் சொல்வதானால் -விடுதலைப் புலிகள் மீளவும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட எதிரிகளானார்கள். எனவே, இலங்கையின் மீதான முதலாவது தலையீடு இலங்கை அரசை வழிக்குக் கொண்டுவரும் நோக்கில் அமைந்திருக்க, இரண்டாவது தலையீடு, விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் இடைநிலையாளர் பாத்திரமாக அமைந்திருந்தது. இதி லுள்ள மிகவும் சுவாரசியமான விடயம்- முதலாவது தலையீட்டின் தோல்வி விடுதலைப் புலிகளை வளர்த்தது. இரண்டாவது தலையீட்டின் தோல்வி அவைகளை இல்லாமல் ஆக்கியது.

இப்போது இலங்கை அதன் மூன்றாவது பாகத்தை எதிர்கொண்டுள்ளது. ஆனால், இப்போது இலங்கை எதிர்கொண்டுள்ள சர்வதேச தலையீட்டிற்கும் இதுவரை இலங்கை எதிர்கொண்டுவந்திருந்த தலையீட்டிற்கும் அடிப்படையிலேயே ஒரு வேறுபாடு உண்டு. இப்பொழுது இலங்கையில் இரண்டு பாத்திரங்கள் இல்லை. பயங்கரவாதி-ஜனநாயகவாதி என்று பிரித்து அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடிய அரசியல் சூழல் இலங்கைக்குள் இல்லை. எனவே, இனிவரப்போகும் சர்வதேச அழுத்தங்கள் என்பவை இலங்கை அரசாங்கத்தின் மீதானதாக மட்டுமே இருக்கப்போகிறது. இந்த பின்புலத்தை கருத்திற் கொண்டுதான் இந்த பத்தி சமீப காலமாக அதிகரித்து வரும் அமெரிக்க அழுத்தங்களை ஆராய விளைகிறது.


மிசேல் சீஷன்

இதில் கவனிக்க வேண்டிய பிறிதொரு விடயமும் இருக்கிறது. முன்னைய சர்வதேச அழுத்தங்களுக்கும் தற்போதைய சர்வதேச அழுத்தங்களுக்குமிடையில் ஒரு அடிப்படையான வேறுபாடு உண்டு. அதாவது, இலங்கை இரு முனைப்பட்ட சர்வதேச அழுத்தங்களை ஒரே நேரத்தில் கையாள வேண்டிய நிலையில் இருக்கிறது. ஒருபுறம் இந்திய அழுத்தம். பிறிதொரு புறம் அமெரிக்க அழுத்தம். இந்திய அரசு எதிரியாகப் பார்க்கும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில்-இந்தியாவின் கவனம் முழுவதும் யுத்தத்தின் போக்கு குறித்தே இருந்தது. ஆனால், இப்போது யுத்தமற்ற சூழலில் சீனாவின் இராணுவ விரிவாக்கம், அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளே இந்தியாவிற்கு முக்கியமாகியுள்ளன. இந்த பின்னணியிலேயே இந்தியாவின் அழுத்தங்கள் அமையும். ஆனால், இந்தியாவின் அழுத்தங்கள் தீவிர நிலையில் இருக்கப்போவதில்லை. அந்த தீவிர நிலையைத்தான் தற்போது அமெரிக்கா எடுத்துக் கொண்டுள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற, யுத்தத்தின் இறுதிக் கட்டம் பற்றிய சர்ச்சைகளில் இருந்தே இலங்கையின் மீதான சர்வதேச அழுத்தத்தின் மூன்றாவது பாகம் ஆரம்பித்திருக்கிறது. இலங்கையின் நவீன அரசியல் வரலாற்றில் அமெரிக்கா இலங்கை விடயத்தில் இத்தகைய தீவிரத்தை காண்பித்து வருவதும் இதுதான் முதற்தடவை. அமெரிக்கா தனது பிடிமானமாகக் கொண்டிருப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆகும். இதன் அடிப்படையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக வடக்கு மாகாணசபை தேர்தலை நடத்துமாறும் தற்போது அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரசின் மீதான அழுத்தங்களுக்கான ஒரு சர்வதேச நியாயத்தை உருவாக்கும் நோக்கில்தான் அமெரிக்கா இத்தகையதொரு பிரேரணையை கொண்டு வந்தது. அதனை பிறிதொருவர் மூலம் கொண்டு வந்தால் அழுத்தங்களுக்கான உரிமையை அதிகம் எடுத்துக் கொள்ள முடியாமல் போகலாம் என்பதை மதிப்பிட்டேதானே முன்னின்று பிரேரணையை கொண்டு வந்து வெற்றிபெறவும் வைத்தது. அமெரிக்கா மனித உரிமை பேரவையில், பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கும் செய்தி வெளியான தருணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார், அமெரிக்க பிரேரணை தோற்றதாக சரித்திரம் இல்லை. ஆனால், இதனை பிறிதொரு வகையிலும் சொல்லலாம். வெல்ல முடியாத குதிரைக்கு அமெரிக்கா ஒருபோதுமே பணம் கட்டுவதில்லை. ஒரு இடத்தில் அமெரிக்கா தலையிடுகிறது என்றால் அதற்கான வெற்றி வாய்ப்புகளை ஏலவே அது மதிப்பிட்டுவிட்டது என்பதுதான் பொருள். எனவே, அமெரிக்கா தன்னால் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் முன் மொழிவுகளை இலங்கை எவ்வாறு செவிமடுக்கின்றது என்பதை நிச்சயமாக அவதானித்துக் கொண்டே இருக்கும்.

-ஆசியா நோக்கி தனது கவனத்தை திருப்பியிருக்கும் இராட்சத கழுகின் பார்வையிலிருந்து இலங்கை அவ்வளவு சுலபமாக தப்பித்துக்கொள்ள முடியுமா? இலங்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்திருக்கும் ஜனநாயகக் கட்சி, இது தொடர்பில் இந்த உலக மானது, தீர்வை எட்டும்வரை இலங்கையில் இடம்பெற்ற யுத்தமீறல் தொடர்பான அழுத்தம் முடிவுக்கு வராது.

அமெரிக்கா கொழும்பின் மீதான தனது கவனத்தை மேலும் தீவிரப்படுத்தப்போகிறது என்பதை கோடி காட்டும் வகையிலேயே ஒபாமா நிர்வாகத்தால் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் புதிய தூதுவரின் ஆரம்ப உரை அமைந்திருக்கிறது. மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருக்கும் மிசேல் சீஷன் அமெரிக்க வெளிவிவகார விடயங்களை கேட்டறியும் செனட் குழுவினர் மத்தியில் உரையாற்றும் போது ஆரம்பத்திலேயே இலங்கை, மிகவும் அதிகமான கப்பல் போக்குவரத்துள்ள மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் உள்ள, இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் அமைந்துள்ளது என்பதை வலியுறுத்திய சீசன்-நேர்மையான மீளிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை நம்பகமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அது இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்குமான குறிப்பாக, முன்னைய முரண்பாட்டு பகுதிகளில் வாழும் மக்களுக்கான நீதி மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இலங்கை தொடர்பில் சீஷன் தெரிவித்திருக்கும் கருத்துகள் அவருடைய. பிரதான பணி யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் நிலைமைகளை கண்காணிப்பதாகவே அமைந்திருக்கும் என்பதையே வலிறுத்துகிறது. இலங்கை எதிர்கொண்டுள்ள சர்வதேச தலையீட்டின் மூன்றாவது பாகம் பிறிதொரு வகை நாலாவது கட்டத்திற்கு இலங்கையைக் கொண்டு செல்லுமா? அமெரிக்க அழுத்தங்களை இலங்கை அரசு எவ்வாறு கையாளப்போகின்றது என்பதை பொறுத்தே இலங்கையின் எதிர்கால அரசியலும்கூட உலகம் எட்ட விரும்பும் தீர்வு என்ன என்பதை இப்போதைக்கு எவராலும் சொல்லிவிட முடியாது. ஏனெனில் அது இலங்கையிலுள்ள அனைவரது விருப்பங்களின் எல்லைகளுக்கும் அப்பாலுள்ளது.

நன்றி: இணையம்

# பஞ்சமாதிபதியின் சிறப்பான யோகங்கள்

பஞ்சமஸ்தானம் என்பது லக்னத்திலிருந்து எண்ண வருகின்ற ஐந்தாமிடமாகும். இந்த ஐந்தாமிடத்தில் தான் பல அரிய பெரிய விடயங்களை நாம் தெரிந்து கொள்ளலாம். இதைப் புத்திரபாவம் என்றும் கூறுவதுண்டு. இதையே ராஜ்யஸ்தானமாகக் கொள்ள வேண்டும். அரசாங்க விடயங்கள், அரசியல் சம்பந்தமான விவகாரங்கள், நல்ல பெயர், புகழ், செல்வாக்கு முதலியனவும் இந்த பஞ்சமஸ்தானத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பெயர், புகழ், செல்வாக்கு என்பவற்றை எப்படியும் ஒரு மனிதன் அடைந்து விடலாம். அதெப்படி முடியும்? புகழுக்காக பலர் பணத்தை வா்ரி இறைத்து புகழ் பெறுவதில்லையே ஏன்? என்று நீங்கள் கேட்கலாம். வாஸ்தவம்தான். ராஜயாதிபதி என்று சொல்லப்பட்ட ஐந்தாமிடத்ததிபதி தொய்ந்து விட்டால் எவ்வளவு செலவு செய்தாலும் எந்தப் பாடுபட்டாலும் புகழை அடைய முடியாதுதான். இது ஒருபுறமிருக்க எப்படிப் பட்ட புகழ் ஒருவருக்கு ஏற்படும் என்பதை கவனிக்க வேண்டும்.

கொலைக்குற்றம் புரிந்தவனும் திருடுபவனும் பலமுறை சிறைக்குப்போனவனும் கூட மக்கள் மத்தியிலே பெயரெடுத்து விடுகிறார்கள். கலப்பட வியாபாரிகள் பெயர்கள் கூட பத்திரிகைகளில் வருகின்றது. இந்த அளவில் இவர்களுடைய பெயர்கள் பலருக்குத் தெரியுமே தவிர இது ஒருவர் புகழ் ஆகாது.நல்ல தான தருமத்தில் சிறந்தவர், தர்மகர்த்தா என்று பெயரெடுக்க வேண்டுமானாலும் பஞ்சமாதிபதி வலுப் பெற்றிருக்க வேண்டும்.

அரசியலில் ஈடுபட்டு மேடைப்பேச்சாளராக வேண்டுமானாலும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வேண்டுமானாலும் ஜாதகத்தில் பஞ்சம ஸ்தானாதிபதியின் தயவு அவசியம் தேவைப்படுகின்றது. சிலர் எம்.எல்.ஏ. வாகவும் மந்திரிகளாகவும் வருகின்றார்கள். இவர்களுக்கும் பஞ்சம ஸ்தானாதிபதியின் தயவு மிக முக்கியமானதாகும். பெரிய எழுத்தாளராகவோ, கவியாகவோ விளங்கவேண்டுமானாலும் பஞ்சமாபதிபதியின் கருணை வேண்டும். சிறந்த ஜோதிடராக விளங்க வேண்டுமானாலும் பஞ்சமாதிபதியின் அருள் வேண்டும்.

பஞ்சம ஸ்தானமானது ஒரு திரிகோண ஸ்தானமென்று ஏற்கனவே நாம் கூறியுள்ளோம். இதைப் பூர்வ புண்ணிய ஸ்தானமென்றும் ஜோதிட நூல்கள் கூறா நிற்கும். அவரவர்கள் செய்த புண்ணியத்தை ஒட்டித்தான் பெயரும் புகழும் ஏற்பட்டு வருகிறது. ஒருவர் மக்கள் மத்தியிலே பலசிறப்பம்சங்களுடன் பிரகாசமாக வாழ்க்கை நடத்துகின்றார் என்றால் அவருக்கு முன் ஜென்ம பலன் அனுசரணையாக இருந்திருக்க வேண்டும். பூர்வ ஜென்ம வாசனையால் இந்த ஜென்மம் இயங்கி வருகின்றது என்று பல பெரியோர்கள் கூறுவதுண்டு. முன்ஜென்மத்தில் நாம் சேர்த்து வைத்திருந்த பாப புண்ணியத்திற்கு ஏற்ப இந்த ஜென்மத்தில் நாம் கிரகங்கள் மூலமாக பலன்களை அனுபவித்து வருகின்றோம் என்பது கண்கூடு. ஆக பெயர், புகழ், செல்வாக்கு ஒரு மனிதனுக்கு ஏற்பட வேண்டுமானாலும் அவனது பூர்வ ஜென்ம சேமிப்பிலிருந்துதான் ஏற்பட வேண்டும். இந்த ஜென்மத்தில் நாம் பாவ காரியங்களில் ஈடுபடாமல் நல்ல காரியத்தில் மனதை செலுத்தி நற்பண்புகளை வளர்த்து பொது மக்களுக்காக உழைத்து வந்தால் அடுத்த ஜென்மத்தில் இந்தப் பலனை அனுபவிக்கலாம்.

கிரகங்கள்கூட இதை ஒட்டியே தான் செயற்படுகின்றன. பஞ்சமஸ்தானாதிபதி ஆட்சிஉச்சம்பெற்றிருந்தால் ஜாதகருடைய ஆர்வம், அறிவாற்றல் முதலியன எந்தத்துறையில் செல்லுகிறதோ அந்தத் துறையில் ஜாதகருக்கு பேரும் புகழும் ஏற்படும்.

பஞ்சமஸ்தானாதிபதி பகை நீச்சம் பெற்றாலும் ஆறு- எட்டு- பன்னிரெண்டில் மறைந்தாலும் பாப கிரகச் சேர்க்கை அல்லது பார்வை பெற்றிருந்தாலும் ஜாதகருடைய வாழ்க்கை எந்தத் துறையில் அமைகிறதோ அதே துறையில் நல்ல பெயரில்லாமல் மங்கி மண்ணுக்குச் சமமாக வாழ்க்கை நடத்த வேண்டிவரும். பஞ்சம ஸ்தானதிபதி நல்லபடியிருந்தாலும் பஞ்சமஸ்தானத்தில் சுபக்கிரகங்கள் இருக்க வேண்டும். பார்க்க வேண்டும். பஞ்சமாதிபதி கெட்டிருக்கும் போது கூட சுபக்கிரகங்களின் இருக்கை-பார்வை ஏற்படுமானாலும் ஜாதகருக்கு புகழ்- செல்வாக்கு சில நாட்களாவது இருந்து வரும். பஞ்சமஸ்மஸ்தானாதிபதி அநேகமாக எல்லா லக்னங்களுக்கும் நண்பனாகவே அமைவதுண்டு.

மேட லக்னத்தை எடுத்துக்கொண்டால் பஞ்சம ஸ்தானாதிபதி சூரியன் ஆகிறான். லக்னாதிபதியான செவ்வாய்க்கு




சூரியன் நண்பன் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். ரிஷப லக்னத்தை எடுத்துக்கொண்டால் லக்னாதிபதியான சுக்கிரனுக்கு பஞ்சமாதிபதியான புதன் நண்பனாகிறான். மிதுன லக்னத்தை எடுத்துக்கொண்டால் லக்னாதிபதியான புதனுக்கு பஞ்சமாதிபதியான சுக்ரன் நண்பனாகிறான். இதுபோலவே ஏனைய சகல லக்னங்களுக்கும் பஞ்சமாதிபதி நண்பணாவதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

பஞ்சம ஸ்தானம் என்பது பெருமைப்படக்கூடிய ஸ்தானமானாலும் அந்தப் பெருமை ஜாதகருக்கு எந்த விதத்தில் கிடைக்கக்கூடும் என்பது அவரவர் கர்ம வினைக்கேற்ப அமைந்து விடுகிறது. பஞ்சம ஸ்தானத்தில் குழந்தைகள் பிறப்பு, பிறந்த குழந்தைகள் பெற்றோருடன் எந்த அளவு ஒற்றுமையாக இருந்து வரும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

குழந்தையில்லையே என்று பல பெற்றோர்கள் ஏங்கி இருக்கும் போது பிறந்த குழந்தையால் தொந்தரவுகளை அனுபவிக்கும் பெற்றோர்களும் உலகத்தில் உண்டு. தகப்பன் எடுத்த பெயரைக் கெடுக்கும் புத்திரர்களும் புத்திரிகளும் நாட்டில் உண்டு. அதே சமயம் ஏழைக்குடும்பத்தில் பிறந்த குழந்தையானாலும் உலகத்தில் பிரகாசமாக வாழும் புத்திர புத்திரிகளும் உண்டு. பண்டிதர் மோதிலால் நேருவின் புத்திரன் ஜவஹர்லால் நேரு இயற்கையிலேயே பெருத்த செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். அவர் உலகப் புகழ் பெற அவர்களுக்கு அமைந்த செல்வம் ஒரு காரணமாக இருந்தது எனலாம். அதே சமயம் மகாத்மா காந்தி, ராஜாஜி, டாக்டர் இராதாகிருஷ்ணன் போன்றோர்கள் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர்கள் தாம். இவர்களைப் பெற்றெடுத்த தாய். தந்தையர்கள் செய்த பாக்கியம் இவர்களை உலகப் புகழ் அடையச் செய்தது.

குழந்தைகள் பிறந்தாலும் இப்படிப்பட்ட குழந்தைகள் பிறக்க வேண்டுமே தவிர தகப்பன் பெயரைக் கெடுக்க கூடிய குழந்தைகள் பிறக்கக்கூடாது. வட நாட்டில் ஒரு மகன் தந்தையை தினம் அடித்து அடித்துச்சாப்பாடு போடு வாரென்று கேள்விப்பட்டோம். அது ஏன் என்று பார்க்கும் போது அவருடைய தந்தையை அவர் மிகவும் துன்புறுத்தி வந்ததாகத் தெரிந்தது. அதன் பலன் இவர் வயிற்றில் பிறந்த குழந்தை இவரையே துன்புறுத்த ஆரம்பித்தது எனலாம். புத்திரர்கள் பிறந்தாலும் அவர்களை வளர்க்கும் விதத்தில் பெற்றோர்கள் அதிக கவ்னம் காட்டி வரவேண்டும். அதற்கும் பூர்வ புண்ணியம் தான் அவசியமாக நிற்கிறது.

அடுத்து ஒருவர் மந்திரோபதேசம் பெற வேண்டுமானாலும் ஆன்மீகத்துறையில் வெற்றிபெற வேண்டுமானாலும் யோகி, ஞானியாக வேண்டுமானாலும் பஞ்சமாதிபதி அருள்புரிய வேண்டும். பஞ்சமாதிபதி கெட்டிருந்தால் மேலே சொல்லிய வகைகளில் வெற்றிபெற முடியாது.கர்ம வினையால் சொல்லப்பட்ட விடயங்கள் ஆர்வமேற்பட்டாலும் பாதியில் நின்றுவிடும்.அதர்வண வேதப் பயிற்சியும் ஜோதிட மந்திர தந்திரங்களும் பஞ்சம தான சக்தியால் தான் ஒருவன் பெற முடியும்.மனம், புத்தி. ஆத்மா முதலியவைகளின் நிலையப் பற்றியும் பஞ்சமஸ்தானம் தான் எடுத்துக்கூற முடியும்.மனித வாழ்க்கைக்கு புத்திக்கூர்மை மிகவும் அவசியமாகின்றது.எவ்வளவு வலுப் பெற்றிருந்தாலும் புத்திக் கூர்மை இல்லாவிட்டால் பலவித தொந்தரவுகளை அனுபவித்துத் தான் தீர வேண்டும்.

புத்திமான் பலவான் ஆவான்
பலமுளான் புத்தியற்றால்
எத்தனை விதங்களிலும்
இடரது வந்தே தீரும்

என்பதால் ஒருவருக்கு அமைந்திருக்கும் புத்தியின் விசேடம் பஞ்சமாதிபதியின் நிலையைக் கொண்டுதான் அறிய வேண்டும். ஆக ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் ஜாதகப்படி பஞ்சம ஸ்தானம் என்று சொல்லப்படும் ஐந்தாமிடம் ஒரு முக்கிய அங்கமாக கருதப்படுகின்றது. இந்தப் பாவத்தால் இன்னும் பல அரிய பெரிய விடயங்களை நாம் தெரிந்து கொள்ளலாம்.

# தருமபுரத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறை; நோயாளர் விடுதிகள் இயங்கவில்லை

(புளியம்பொக்கணை)

கண்டாவளைப் பிரதேசத்தின் தருமபுரம் வைத்தியசாலையில் வைத்தியர்கள் வெற்றிடம் நிலவுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தருமபுரம் வைத்தியசாலையில் இதுவரை காலமும் நிலவி வந்த வைத்தியர் பற்றாக்குறையால் பதில் வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஆனால் இப்பிரதேசம் அதிகளவு சனத்தொகையைக் கொண்டிருப்பதால் வைத்தியர் தேவையும் உள்ளது.


அத்துடன் கடந்த 45 வருடங்களுக்கு மேலாகவும் யுத்த காலங்களிலும் ஆண், பெண் இருபாலாருக்குமான நோயாளர் தங்கும் விடுதிகளில் சேவைகள், பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் நோயாளர்கள் தங்கும் விடுதிகள் அனைத்தும் மூடப்பட்டு வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கி வருகின்றது.

மேலும் யுத்த காலத்தின் பின்னர் தற்பொழுது கிளிநொச்சி மாவட்டம் பாரிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத் துள்ளபோதிலும் குறிப்பிட்ட இவ்வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் செயற்பட்டு வருவது மிகவும் வேதனைக்குரிய விடயம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் நேயாளர் நலன் புரிச் சங்க சிற்றுண்டிச்சாலை கூட தற்போது இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு இவற்றுக்குரிய தீர்விணைப் பெற்றுத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-263)



ஊரெழு, கிழக்கு சர்வதேச ஒன்றியத்தின்ரால் பல்கலைக்கழக மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நிலைய முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# வடக்குக் கிழக்கில் சரணாலயங்கள் பூங்காக்கள் அமைப்பதற்கு திட்டம்

## வனஜீவராசிகள் திணைக்களம் தகவல்

வடக்குக் கிழக்கில் புதிய தேசிய பூங்காக்கள் மற்றும் சரணாலயங்களை அமைப்பது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அத்திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிவடைந்து நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலை வனஜீவராசிகள் திணைக்களத்தின் வலயங்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்கில் புதிதாக 4 வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களம் இலங்கையை 7 வலயங்களாகப் பிரித்திருந்தது. யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வடமத்திய மாகாண வலயத்திற்குள்ளேயே உள்வாங்கப்பட்டிருந்தன. நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில் வடக்குக்கிழக்கில் புதிதாக நான்கு வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றையும் சேர்த்து நாடு முழுவதிலும் மொத்தமாக 11 வலயங்கள் உள்ளன.

கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய பகுதிகளிலேயே புதிதாக நான்கு வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வடபகுதியில் புதிதாக தேசிய பூங்காக்கள் மற்றும் சரணாலயங்கள் அமைப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றது. குறிப்பாக சுண்டிக்குளம், மடுவீதி மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் தேசிய பூங்காக்களை அமைப்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது: (அ-2)

# கன்ரர் மரத்துடன் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்

கன்ரர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கன்ரர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தின் போது வாகனத்தில் பயணித்த இருவரும் கண்ணாடியை உடைத்தே மீட்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த து.துசியந்தன் (வயது-27) என்ற நபர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும் கிரிசாந்தன் (வயது-21) என்ற நபர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-3-254)



# சிறுவர் அரங்கம்

143

## மரியாதைராமன் கதைகள்

## அடியாத மாடு படியாது



ஓர் ஊரில் மாயாண்டி என்பவன் இருந்தான். பொருள் தேடுவதற்காக அவன் வெளியூர் சென்றான்.

அங்கே உழைத்து நிறையப் பணம் சேர்த்தான். அந்தப் பணத்துடன் தன் ஊர் திரும்பிக் கொண்டிருந்தான்.

வழியில் ஓர் ஊரை அவன் கடக்க வேண்டி இருந்தது.

திருடன் ஒருவன் அவனை வழி மறித்தான்.

அந்தத் திருடனின் தோற்றமே அச்சம் தருவதாக இருந்தது. அவன் முகத்தில் பெரிய வெட்டுக் காயம் இருந்தது.

உன்னிடம் உள்ள பணத்தை தந்துவிடு. இல்லையேல் கொன்று விடுவேன் என்று மிரட்டினான்.

தப்பிக்க வழி இல்லையே என்று நடுங்கினான் மாயாண்டி.

அந்தத் திருடன் மாயாண்டியின் பணப்பையைப் பிடுங்கினான். ஒரு நொடிக்குள் ஊருக்குள் ஓடி மறைந்தான்.

பணத்தை இழந்த மாயாண்டி, ஐயோ! பாடுபட்டுச் சேர்த்த பணம் போய் விட்டதே. இனி நான் என்ன செய்வேன்? நானும் என் குடும்பமும் பட்டினியால் சாகவேண்டியது தானா? என்று அழுது புலம்பினான்.

அவன் அழுகையைக் கேட்டு அங்கே ஒரு கூட்டம் கூடிவிட்டது.

அவன் மீது இரக்கப்பட்ட சிலர், என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்? என்று விசாரித்தார்கள்.

அவனும் நடந்ததைச் சொன்னான்.

பணத்தைத் திருடியவன் இந்த ஊருக்குள் ஓடியதாகச் சொல்கிறாய். அவன் இந்த ஊராகத்தான் இருக்க வேண்டும்.

நீதிபதி மரியாதைராமன் அவர்களிடம் சென்று முறையிடு. உன் பணம் கண்டிப்பாகக் கிடைக்கும்! என்றார்கள்.

நீதிமன்றம் சென்றான் அவன். நீதிபதி மரியாதைராமனைப் பணிவாக வணங்கினான். நடந்ததை எல்லாம் சொல்லி அழுதான்.

அந்தத் திருடன் எப்படி இருந்தான்? அவன் அடையாளங்களைச் சொல்! என்று கேட்டார் நீதிபதி.

ஆறடி உயரம், கறுப்பு நிறம், பெரிய மீசை, முகத்தில் குறுக்காக வெட்டுக் காயம், வலது கன்னத்தில் மச்சம்.

முரடனைப் போல காட்சி அளித்தான் அவன். என்னால் அவனை எப்பொழுதும் அடையாளம் காட்ட முடியும்! என்றான் மாயாண்டி.

காவலர்களை அழைத்த அவர் திருடனின் அடையாளங்களைக் கேட்டீர்கள் அல்லவா, எங்கே இருந்தாலும் அவனைக் கண்டு பிடித்து இழுத்து வாருங்கள்! என்று கட்டளை இட்டார்.

காவலர்கள் அந்தத் திருடனைக் கண்டுபிடித்தார்கள்.

நீதிமன்றத்திற்கு இழுத்து வந்தார்கள்.

அவனைப் பார்த்த மாயாண்டி, ஐயா! இவனே என்னிடம் பணத்தைப் பிடுங்கியவன். எப்படியோ இவனைக் கண்டுபிடித்து விட்டீர்கள். பணத்தை மீட்டு என்னிடம் தாருங்கள்! என்று கெஞ்சினான்.

அந்தத் திருடனைப் பார்த்தார் நீதிபதி. நீ இவரிடம் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடினாயா? பொய் சொன்னால் கடுமையான தண்டனை கிடைக்கும்! என்று மிரட்டினார்.

நீதிபதி அவர்களே! நான் நல்லவன். இதற்கு முன் இவரைப் பார்த்ததே கிடையாது. என் மீது ஏன் பழி போடுகிறார். ஒன்றுமே விளங்கவில்லை. என் பேச்சை நம்புங்கள்! என்றான் அவன்.

மாயாண்டியைப் பார்த்து அவர், இவர் தான் உம்மிடம் பணத்தைப் பிடுங்கினார் என்கிறீர். அதைப் பார்த்த சாட்சிகள் யாராவது இருக்கிறார்களா? என்று கேட்டார்.

ஐயா! ஊருக்கு வெளியே நிகழ்ந்தது இது. அங்கே ஆள் நடமாட்டமே இல்லை. யாரும் இதைப் பார்க்கவில்லை.

சாட்சிகள் யாரும் இல்லை. எப்படி உண்மையை அறிவது என்று குழம்பினார் அவர்.

திருடனைப் பார்த்து அவர், சாட்சிகள் இல்லை! அதனால் குற்றமற்றவர் என்று உம்மை விடுதலை செய்கிறேன்! என்றார்.

மகிழ்ச்சியுடன் வீட்டிற்குப் புறப்பட்டான் அவன்.

மாயாண்டியைப் பார்த்தார் நீதிபதி. இன்னும் சில நாட்கள் இந்த ஊரிலேயே தங்கு! என்றார்.

நம்பிக்கைக்கு உரிய காவலர்கள் இருவரை அழைத்தார் அவர்.

பணத்தைப் பிடுங்கவில்லை என்றானே அவனைப் பின் தொடர்ந்து செல்லுங்கள்.

வீட்டில் அவன் என்ன பேசுகிறான் என்று மறைந்திருந்து கேளுங்கள். அதை இங்கு வந்து சொல்லுங்கள் என்றார்.

காவலர்களும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

வீட்டிற்குள் நுழைந்தான் அவன்.


மனைவி அவனைப் பார்த்து நீதிமன்றத்தில் என்ன நடந்தது? சொல்லுங்கள்! என்று பரபரப்புடன் கேட்டாள்.

காவலர்கள் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நீதிபதி என்னைப் பார்த்து இவனிடம் பணத்தைத் திருடினாயா? உண்மையைச் சொல் என்று மிரட்டினார்.

நானா ஒப்புக் கொள்வேன்? இல்லவே இல்லை என்று அடித்துச் சொன்னேன். என் பேச்சை உண்மை என்று நம்பினார் அவர். என்னை விடுதலை செய்து விட்டார் என்று மகிழ்ச்சியுடன் சொன்னான் அவன்.

காவலர்கள் உங்களை அழைத்துச் சென்றதைப் பார்த்தேன். திருட்டு வெளிப்பட்டு விட்டது! மாட்டிக் கொண்டீர்கள் என்று நடுங்கினேன்.

எப்படியோ தப்பித்து வந்தீர்களே எனக்கு அது போதும்! என்றாள் மனைவி.



அடியே! இனிமேல் நாம் எதற்கும் அஞ்ச வேண்டாம். சில நாட்கள் போகட்டும். அந்தப் பணத்தை எடுத்து மகிழ்ச்சியாக செலவு செய்வோம்! என்றான் அவன்.

அவர்கள் பேசியதை எல்லாம் மறைந்திருந்து காவலர்கள் கேட்டார்கள்.

நடந்ததை அப்படியே மரியாதை ராமனிடம் சொன்னார்கள்.

நீங்கள் மீண்டும் அவனை இங்கே இழுத்து வாருங்கள்! என்று கட்டளை இட்டார் அவர்.

காவலர்கள் சூழ நீதிமன்றத்திற்கு வந்தான் அவன்.

உண்மை வெளிப்பட்டு விட்டது. நீதான் திருடினாய்! நீயும் உன் மனைவியும் பேசியதைக் காவலர்கள் மறைந்திருந்து கேட்டார்கள்.

திருடவில்லை என்று இனி மழுப்ப முடியாது. உண்மையை ஒப்புக் கொண்டால் தண்டனை குறையும்! என்று மிரட்டினார் அவர்.

நீதிபதி அவர்களே! நான் திருடவில்லை. திருடியதாக எதுவும் நான் பேசவில்லை.

இவர்கள் கேட்டு வந்ததாகச் சொல்வது முழுப் பொய். என்னை நம்புங்கள்! என்று அடாவடியாகப் பேசினான் அவன்.

கோபம் கொண்ட அவர், அடியாத மாடு படியாது. இவனை அடித்து உதைத்து உண்மையை வரவழையுங்கள். உண்மையை ஒப்புக் கொள்ளும் வரையில் விடாதீர்கள்! என்று காவலர்களுக்குக் கட்டளை இட்டார்.

காவலர்கள் அவனை நையப் புடைத்தார்கள்.

வலி தாங்க முடியாமல் துடித்தான் அவன்.

ஐயா! உண்மையை ஒப்புக் கொள்கிறேன். அவனிடம் இருந்து பணத்தைப் பிடுங்கியது நான் தான். அந்தப் பணத்தை என் வீட்டுத் தோட்டத்தில் புதைத்துள்ளேன்.

இனியும் என்னால் அடி தாங்க முடியாது. அடிப்பதை நிறுத்துங்கள் என்று அலறினான்.

காவலர்கள் அவன் வீட்டிற்குச் சென்றார்கள். அவன் சொன்ன இடத்தில் தோண்டினார்கள்.

அவர்களுக்குப் பணம் கிடைத்தது. அந்தப் பணத்துடன் நீதிமன்றம் வந்தார்கள்.

என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்று நடுங்கினான் அவன்.

நீதிபதி அவனைப் பார்த்து, நீ திருடியது முதல் குற்றம். அதை மறைக்க முயன்றது இரண்டாவது குற்றம். இந்தக் குற்றங்களுக்காக உனக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கிறேன்! என்றார்.

மாயாண்டியை அங்கு வரவழைத்தார் அவர்.

திருடு போன பணத்தை அவனிடம் தந்தார்.

மகிழ்ச்சி அடைந்த அவன், நீதிபதி அவர்களே! இந்தப் பணம் கிடைக்காது என்றே நினைத்தேன். மீண்டும் கிடைக்க அருள் செய்தீர்கள்! நன்றி என்று அங்கிருந்து புறப்பட்டான்.

கோண்டாவில் வடக்கு திருவருள் மிகு சாமுண்டாதேவி
சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்
பூங்காவனத் திருவிழா -27.06.2012



மதியம்:-விசேட பூசையுடன் அன்னதானமும்
மாலை:- 6 மணிக்கு ஞானவைரவப் பெருமான் விசேட
மங்கள வாத்தியத்துடன் வீதியுலா வரும் காட்சியும்
அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் ராகம்
இசைக்குழுவின் இன்னிசை கானமும் இடம் பெறும்.

உபயகாரர்:-

மயில் அழகு கலை
நிலையம்
வீடியோ அன் போட்டோ



மயில்-ரமேஸ்
வீரபத்திரர் வீதி,
கோண்டாவில்.

தபால்பெட்டி சந்தி,
திருநெல்வேலி
தொ.பே:-0776914123,
0214922023




## மோ.சை.விபத்து; சிகிச்சை பலனின்றி சிறுவன் மரணம்

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயம டைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

குறித்த விபத்துச் சம்பவம் அராலி செட்டி யார் மடத்தில் கடந்தமாதம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த அராலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் மாணவருமாகிய சுரேஸ்குமார் டிலக்ஷன் (வயது 16) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுவன் தனது உறவினருடைய மோட்டார்சைக்கிளினை அராலி செட்டியார்மட வீதியினூடாக வேகமாகச் செல்லும் போது கட்டுப் பாட்டினையிழந்த மோட்டார்சைக்கிள் தடம் புர ண்டதில் படுகாயமடைந்த சிறுவன் அராலி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு 23 நாட்கள் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலை யில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (அ-2-4)

## நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரிக்க புதிதாக 75 நீதவான்கள்

### ஹக்கீம் யோசனை முன்வைப்பு

நிலுவையில் உள்ள வழக்குகளை விசா ரணை செய்யும் நோக்கில் புதிதாக 75 நீதவான்கள் நியமிப்பது தொடர்பான யோச னைத் திட்டத்தை நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்வைத்துள்ளார்.

இந்நிலையில் மேல்நீதிமன்ற நீதவான் களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள் ளது. நீதவான்களின் பற்றாக்குறை காரண மாக வழக்கு விசாரணைகளில் தாமதம் ஏற் பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள வழக்குகளின் எண் ணிக்கைக்கு ஏற்றவகையில் நீதவான்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நீதிமன்ற சட்டத்திலும் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது என ஹக்கீம் தெரி வித்துள்ளார். (அ-2)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி அரசசாராயத்தை விற்பனைசெய்த நபருக்கு யாழ்.நீதிமன்றம் 5ஆயிரம் ரூபா அபராதம் விதித் துள்ளது.

வேலணையினைச் சேர்ந்த குறித்தநபர் யாழ்.நகரினையண்உ டிய பகுதியில் 180 மில்லிலீற்றர் அரசசாராயத்தினை அனு மதிப்பத்திரமின்றி விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேச ராஜா குறித்த நபருக்கு 5 ஆயிரம்ரூபா அபராதம் விதித்துத் தீர்ப் பளித்தார்.

---

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் பொது இடத்தில் புகைத்தலை மேற்கொண்ட நபருக்கு யாழ்.நீதிமன்றம் இரண்டாயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபர் பொது இடத்தில் புகைத்தலினை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்.பொலிஸாரால் கைது செய் யப்பட்டு யாழ்.நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராஜா குறித்த நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (அ-2-4)

## போசாக்கு கண்காட்சி

உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பணி மனையினால் நடத்தப்படும் போசாக்கு கண் காட்சி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் ஏழாலை ஸ்ரீமுரு கன் வித்தியாலய மண்டபத்தில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயக் குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், உடுவில் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ், வலிகாமம் கல்விவலய கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும் கௌரவவிருந்தினராக பிராந்திய மலேரியா தடை இயக்கப்பொறுப்பதிகாரி வைத்திய கலா நிதி இ.சிவசங்கர், பிராந்திய தொற்று நோயி யலாளர் வைத்தியகலாநிதி ச.சிவகணேசன், பிராந்திய தாய்சேய் நல வைத்தியதிகாரி வைத்தியகலாநிதி திருமகள் சிவசங்கரும், யாழ்.மாவட்ட காசநோய் சிகிச்சை வைத்திய பொறுப்பதிகாரி சி.யமுனானந்தா ஆகியோ ரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் பரஞ்சோதி சோதிமதி

மண்ணுலகில்
04.09.1945

விண்ணுலகில்
08.07.2011



ஓராண்டு சென்றதம்மா -நீ
எம்மை விட்டுச் சென்று ஆனாலும்
நீங்காது எம் பாசம் -மாறாது
எம் துயரம் அம்மா
எம் வாழ்வில் விளக்கேற்றிய தாயே
நீ எம் இதயத்தில் கோயில் ஆனாயம்மா
உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென
கடவுளை வேண்டி நிற்கும்

குடும்பத்தினர்
யாழ்ப்பாணம்.
தகவல்-ப.பாஸ்கரன்

(8712)

# கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் 163 ஆசிரியர்களுக்கு வடமாகாணப் பாடசாலைகளில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரிகளில் 2009/2012 ஆம் கல்வியாண்டுக்கான கற்கை நெறியில் தமது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்துள்ள 163 ஆசிரியர்களுக்கான நியமனங்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படவுள்ளது.

இந்நியமனக் கடிதங்களைப் பெறவுள்ள சகல ஆசிரியர்களும் அலரி மாளிகைக்கு வருகை தந்து தமது நியமனக் கடிதத்தை பெற்றுக்கொள்ளுமாறு வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் கேட்டுள்ளார்.

### தமிழ்

ப.சுரெக்கலா (கொடிகாமம்), சி. தர்சினி (வவுனியா), கு. விக்னேஸ்வரி (வவுனியா), வி.வினிதா (கரவெட்டி)

### கணிதம்

இ.ஞானறூபி (அச்சுவேலி), கி.லக்சனா (தெல்லிப்பழை), இ.ப.துர்க்கா (கரவெட்டி), ச. தேவிகா (கரவெட்டி), கு.யசிந்தா (கோண்டாவில்), சி.சியாமளா (கரவெட்டி), சி.ஜனோஜா (இளவாலை), வை.விதுசிகா (புலோலி), ந.உஷாலினி (மானிப்பாய்), கி.தாட்சாயினி (சுழிபுரம்), கு.சிவரூபினி (நீர்வேலி), சு.றாதை (சுன்னாகம்), த. சரணியா (வல்வெட்டித்துறை), து. விஜயப்பிரகாஸ் (கோண்டாவில்), பா. யாழினி (கொக்குவில்), தே. இராமச்சந்திரன் (கரவெட்டி), சி.சத்தியவான் (மானிப்பாய்), கு. திலீபன் (சாவகச்சேரி), ச.சபேசன் (பருத்தித்துறை), ஏ.ம.கௌசிகன் (யாழ்ப்பாணம்), து. பிரசாத் (புங்குடுதீவு), சி.சசீவன் (சாவகச்சேரி), இ. பிரசாந்தினி (ஏழாலை), க.தர்சினி (மிருசுவில்), ம.நீபன் (மல்லாகம்), சி.பரணீதரன் (சுன்னாகம்), து.புஸ்பகாந்தன் (காரைநகர்), ம.லோகபரணி (அளவெட்டி)

### விஞ்ஞானம்

ப.நிருபா (தொண்டைமானாறு), வி. அபிராமி (சுழிபுரம்), து.றேமினா (மானிப்பாய்), ந. துஸ்யந்தன் (யாழ்ப்பாணம்), அ. சானுஜா (ஆனைக்கோட்டை), ச.சங்கீதா (உரும்பிராய்), தே. சிந்துஜா (கோப்பாய்), அ.கேசிகா (யாழ்ப்பாணம்), ந.சங்கீதா (தாளையடி), இ.சுகன்ஜா (யாழ்ப்பாணம்), நா. அபிராமி (சுழிபுரம்), செ.செல்வபரன் (அளவெட்டி), கு.தனுசன் (வவுனியா), இ.கார்த்திகா (பருத்தித்துறை), ம.பபிதா (சுன்னாகம்), செ. தாட்சாயினி (கைதடி)

### ஆங்கிலம்

கி.கிருஸ்ணசாந்தினி (யாழ்ப்பாணம்), து. நிதர்ஜா (வல்வெட்டித்துறை), உ. மிதுஜா (நல்லூர்), சி. பாரதி (பருத்தித்துறை), மா. மெனசியா மெலேனி (யாழ்ப்பாணம்)

### தகவல் தொழில்நுட்பம்

கி. ஜஸ்ரினா (கொழும்புத்துறை), இ.சுஜிந்தா (சுன்னாகம்), ஜெ. அனோஜா (ஆனைக்கோட்டை), ஜே. நந்துஜா (மல்லாகம்), ஜெ. ஜேசுதன் (சங்கானை)

### உடற்கல்வி

சி. வக்சலா (மல்லாகம்), ஸ்ரான்லி நிக்கொலன் (மன்னார்), கு.நிலானி (சுன்னாகம்), அ.ஜெ.அன்ரன் ரஜீம்ராஜ் (மாதகல்), கு. கோபிநாத் (உடுப்பிட்டி), ப. நிறஞ்ஜலா (வவுனியா), இ.நிறஞ்சலா (காரைதீவு)

### சமூகவிஞ்ஞானம்

அ.சோபனா (யாழ்ப்பாணம்), த.கோகுலராம் (யாழ்ப்பாணம்), ம.அமிர்கா (மானிப்பாய்), தி. கலைச்செல்வி (ஆனைக்கோட்டை), வி. நதியா (கிளிநொச்சி), ரா. கைலநாதன் (வவுனியா), ஆ. தர்மினி (வவுனியா)

### உணவுதொழில்நுட்பம்

க.ரோகினி (கொழும்பு), சூ.றேணுகா (யாழ்ப்பாணம்), தி.சங்கீதா (இணுவில்), ச.கஜேந்தினி (யாழ்ப்பாணம்), பொ.ஜோகினா (யாழ்ப்பாணம்), எஸ்.எம். கிறிஸ்ரலின் (வவுனியா)

### விசேடகல்வி

பா. ரஜிந்தன் (யாழ்ப்பாணம்), சி.சாலினி (கரவெட்டி), வ.உமா (அத்தாய்), ந.அனுஷா (சுழிபுரம்), இ.விஜயநிதி (தெல்லிப்பழை), இ.நிலக்ஷனா (உரும்பிராய்), சி.சிவசங்கர் (நீர்வேலி), சி.வினோதரன் (உரும்பிராய்), ம.தனேஸ்வரன் (உரும்பிராய்), ஜெ. நீரஜா (யாழ்ப்பாணம்), சி. துஸ்யந்தி (யாழ்ப்பாணம்), சி.சிவநந்தினி (கரவெட்டி), ந.துஸ்யந்தி (கரவெட்டி), த.சரண்யா (உடுப்பிட்டி வடக்கு)

### விவசாயம்

உ. ஜெனாலினி (உரும்பிராய்), பி.ஆரணி (உரும்பிராய்), பா. பாலசுதன் (யாழ்ப்பாணம்), செ. தீபிகா (ஓமந்தை), கோ.இளங்கோவன் (யாழ்ப்பாணம்), சா.சிவசகிவன் (யாழ்ப்பாணம்), த.தயாளகுமார் (யாழ்ப்பாணம்), செ. சிந்துயா (வவுனியா), கு.ரிஷாந்தினி (வவுனியா), க.மசூதா (வவுனியா)

### நாடகமும் அரங்கியலும்

ச.வினோஜா (யாழ்ப்பாணம்), த.விஜிதா (யாழ்ப்பாணம்), கே.சர்மினி (வட்டுக்கோட்டை), நா. தாரணி (பண்டத்தரிப்பு), செ.கிஸ்ணநந்தினி (பண்டத்தரிப்பு), பா. பகீர்பரன் (சுழிபுரம்), பி.பிரசாந்தி (சுன்னாகம்), க.பீரதீபா (மீசாலை), மா.துஷியந்தி (மன்னார்), ப.கிருசிகா (ஏழாலை), ப.கமில்டன் (யாழ்ப்பாணம்), த.நிதர்சன் (சண்டிலிப்பாய்), அ.டினோசன் (மானிப்பாய்) ப.கஜமுகன் (சுழிபுரம்)

### நடனம்

செ. ருசியந்தினி (சுன்னாகம்), வ.கேமராதா (சித்தங்கேணி) ம.வாசுகி (கொக்குவில்), பா.சுஜாத்தா (உரும்பிராய்), ம.ஜெயராணி (இணுவில்), க.உஷாந்தி (யாழ்ப்பாணம்), பா.சர்மிளா (கொடிகாமம்), வி.ஜசிந்தா (கொக்குவில்), அ.கனிதீபா (சுன்னாகம்), செ.ரோமியா (கொக்குவில்)

### சித்திரம்

பா. நதியா (அச்சுவேலி), ச.சோபனராஜ் (மானிப்பாய்), கா. பிரகாஷ் (நீர்வேலி), வை. செல்வரத்தினம் (வவுனியா), ம. கிருபசேனன் (இணுவில்), வீ.விஜிதரன் (இணுவில்), சி.உமாகரன் (சுன்னாகம்), சி. பிரதீபன் (நல்லூர்), க. யாழ்வேந்தன் (அச்சுவேலி), பி.நிசாந்தன் (புங்குடுதீவு), வ.கவிதாஸ் (கிளிநொச்சி), பு.சசிதரன் (வவுனியா)

### இந்து சமயம்

செ. ஜீவிதா (எழுது மட்டுவாழ்), நி. சத்தியா (கொடிகாமம்), சி. துஸ்யந்தன் (அனலைதீவு), இ.கிருஸ்ணராஜ் (இணுவில்), இ. சவுந்தரி (மன்னார்), ந. செந்தூரன் (வவுனியா), சி.ஜீவரதி (வவுனியா), ச.மாலதி (பொலிகண்டி), தி.பகீரதி (இளவாலை), பா. கௌதமி (சாவகச்சேரி), ம.நிரோசிகா (மல்லாகம்)

### கிறிஸ்தவம்

அருட்சகோ.அ.லே.றென்சி (யாழ்ப்பாணம்), அருட்சகோ. அ.சி.மேரி அனிஸ்ரிலா (கரவெட்டி), கி.டிலானி (வவுனியா), அ.அருள்வதனி (அல்லைப்பிட்டி), ம.ஜோன்சன் மரீன் (ஆனைக்கோட்டை), த.டானியா ரூசி அனோசியஸ் (யாழ்ப்பாணம்), சி.ஆன்சோபியா (கீரிமலை), அருட்சகோ.ச.மெரினா (யாழ்ப்பாணம்), அருட்சகோ.தி.தேவஜெனோவா (யாழ்ப்பாணம்), அருட்சகோ.தி.வேணிகலாமேரி (யாழ்ப்பாணம்), ம.ஜெசிம்மா (வவுனியா)

### இஸ்லாமிய சமயம்

ம.மகறூப் (மன்னார்), அ.முகம்மது முகைதீன் (நயினாதீவு), பு.டி.ஆயிசா (மன்னார்)

# தகவல் தொழில்நுட்பப்பாடத்திற்கு 59 ஆசிரியர்களுக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் பூாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் உள்ள 59 பாடசாலைகளுக்கு தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கான ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறவுள்ள வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

### விஞ்ஞானமாணி

தில்லைநாதன் யதுபாலதரன் (நவாலி கிழக்கு, மானிப்பாய்), கணேசமூர்த்தி சிவரஞ்சினி (புலோலி தெற்கு, புலோலி), தேவரத்தினம் தேவதர்சன் (சங்கரத்தை), வீரசிங்கம் விசிதன் (யாழ்ப்பாணம்), நடேசு சுவேதன் (வவுனியா), ஜீவகி குணசிங்கம் (யாழ்ப்பாணம்), சுபோதினி சந்திரபாலன் (சுழிபுரம்), திருமதி மதியானந்தன் சுகந்தினி (யாழ்ப்பாணம்), ராதை தவத்துரைராசா (கரவெட்டி), திருமதி லக்ஸ்மன் சிவாஜினி (வட்டுக்கோட்டை), திருமதி சசிகரன் கீர்த்தனா (மீசாலை), அரியரட்ணம் கனிஸ்ரோ (யாழ்ப்பாணம்), அப்துல் றிசட் முகம்மதுறைசூன் (சம்மாந்துறை), திருமதி சதீசன் தனுசா (மீசாலை), கோபாலசிங்கம் பிரதீப்குமார் (கிளிநொச்சி), பிரணாளினி செல்வநாயகம் (கொடிகாமம்), முகம்மது ஸில்மி (சம்மாந்துறை), அனீரோ நீரஜா கதிர்காமதேவன் (யாழ்ப்பாணம்), அஜீஸ் அமின் பைரூஸ் (மன்னார்), முகம்மதிபு றஹீம் முகம்மட் இம்தியாஸ் (சம்மாந்துறை), வல்லிபுரம் அகிலன் (அச்சுவேலி), இராசரத்தினம் தனஞ்சஜன் (தெல்லிப்பழை), சுகுமார் சுமந்திரன் (முல்லைத்தீவு), தங்கமயில் மதுசூதனன் (தாழையடி), ஜெஸ்மியா இஸ்மாயில் (கல்முனைக்குடி), நடேசு ஆதவன் (அல்வாய்), சண்முகம் யோகானந் (திருகோணமலை), முகம்மத் றபீக் சியா உர்ரஹ்மான் (சாய்ந்தமருது), இராஜேந்திரம் இதயராஜன் (மட்டக்களப்பு), சுயிதா கந்தசாமி (மானிப்பாய்), திருச்செகநாதன் வரோதயன் (அளவெட்டி), யோசப் சுதர்சன் (மன்னார்), பாலகிருஷ்ணன் கஜேந்திரன் (வல்வெட்டித்துறை), எரோசின் செபஸ்தியான் டபரேரா (மன்னார்), அப்துல் அசீஸ் இல்யாஸ் (சம்மாந்துறை), ஆதம் வாவா ஸல்மானுல் பாரிஸ் (சாய்ந்தமருது)

### தகவல் தொழில்நுட்பம்

திருமதி கார்த்திகா சத்தியேந்திரன் (சாவகச்சேரி), நாகேஸ்வரன் ஜீவிதா (வல் வெட்டித்துறை), அன்ரன் துரைசிங்கம் ஜெயந்தன் (வவுனியா), சந்திரசேகர் சிவாகரன் (வவுனியா), ஆர்திகா சிவகுமார் (வவுனியா), அசோக்தா பஞ்சாட்சரம் (யாழ்ப்பாணம்), கே.ரி.வை. விக்கிரமரத்ன (வியாங்கொடை)

### பௌதீக விஞ்ஞானம்

முஹம்மது அபூபக்கர் முகம்மட் றியாஸ் (சாய்ந்தமருது), சாஜிதா சாகுவ்ஹமீது (சாய்ந்தமருது), ஆதம்வாவா நவ்சாத் (நிந்தாவூர்)

### உயிரியல் விஞ்ஞானம்

அலியார் சித்திறஜானா (சாய்ந்த மருது-02) ஜசமானாஹஸீன் முகம்மது ஹனிபா (சாய்ந்தமருது), நுஸ்ரத் ஹில்மா முகம்மது செய்னுலாப் தீன் (சாய்ந்த மருது)

### கணனி விஞ்ஞானமாணி

திரேசா சந்திரவதனி வஸ்தியாம்பிள்ளை (மன்னார்), வேலும்மயிலும் தனேஸ்குமார் (மானிப்பாய்)

### கணனி பிரயோகமாணி

யோகராசா கோபிராஜ் (யாழ்ப்பாணம்), இப்றாலெப்பை பாத்திமாஷாக்கிறா (சம்மாந்துறை), இராசரத்தினம் ராஜ்குமார் (வவுனியா), கரிபியேஸ் குரூஸ் கிளறன்ஸ் மெறில் (மன்னார்)

### கணனி தொழில்நுட்ப விஞ்ஞானமாணி

ரமணியம்மாள் பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்)

### வணிக நிர்வாகமாணி

அபீலா அப்துல் றசூல் (கல்முனை), முகம்மது அசனார் மிஹாறா (கல்முனை), முகையதீன் முகம்மட் அர்ஷத் (சாய்ந்த மருது)

# இளையோர் காணாமல் போவதும் வீடுவந்து சேர்வதுமே இன்றையநிலை

## யாழ்.பிராந்திய ம.உ. இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்.மனித உரிமைக் காரியாலயத்தில் தற்போது காணாமல் போவதாக முறையிடப்படும் சம்பவங்களில் அதிகமானவை இளவயதுக் கோளாறுகளால் இடம்பெறும் சம்பவங்களாகவே காணப்படுவதாக யாழ்.பிராந்திய மனித உரிமைகள் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் கடத்தல்கள், காணாமல் போதல் ஆகிய சம்பவங்கள் அதிகமாகக் காணப்பட்டன.

எனினும் தற்போதைய காலப்பகுதியில் இளவயதினரே காணாமற்போய் பின்னர் அவர்கள் ஓரிரு நாட்களில் தாமாகவே வீடுகளினை வந்தடைகின்றனர். இங்கு முறையிடப்படுகின்ற காணாமல் போனமை தொடர்பிலான முறைப்பாடுகளில் கூடுதலாக தமது சுயவிருப்பின் பேரிலேயே காணாமற்போயுள்ளனர்.

சில சம்பவங்களில் ஆணும் பெண்ணும் சேர்ந்தே காணாமல்போய் விடுகின்றனர். இவர்களுடைய பெற்றோர் தமது பிள்ளைகள் காணாமற் போய்விட்டதாகக்கூறி பொலிஸாரிடமும் பின்னர் மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறையிடுகின்றனர்.

இவ்வாறான முறைப்பாடுகளினால் நாம் சில நேரங்களில் சில சந்தேகங்களினைத் தெளிவுபடுத்தியே பெற்றோர்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்கிறோம்.

காணாமல் போனவர்களில் வெவ்வேறு இடங்களில் குடும்பமாக வாழ்ந்து வருவதாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

எனினும் தற்போது காணாமல் போகும் சம்பவங்கள் கடந்த காலங்களினைப் போல் இல்லை எனவும் அவை அதிகமாக அரச நிர்வாக முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளே அதிகம் இடம்பெறுவதாகக் கிடைக்கப் பெறுகிறதென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-4)

குடை நடுவிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்தோரூர் நண்ணினும் நல்குவர்
-ஔவையார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சந்திரிகாவின் அழுகை போல உங்களுக்கும் ஏற்படலாம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பத்து வருடங்கள் தொடர்ந்து ஜனாதிபதியாக இருந்தவர்.

ஜனாதிபதியாக இருந்த காலத்தின் ஆரம்ப கட்டத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த விடயங்களில் அவர் கரிசனை கொண்டிருந்தார். ஆயினும் இனப்பிரச்சினைக்கான தீர்வினை அவராலும் அடைய முடியாமல் போயிற்று.

சந்திரிகாவுக்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இருந்த போதிலும்,

1995களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றிய பின்னர் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி எந்தவிதமான அக்கறை அற்றவராகவே இருந்தார்.

இந்த வரலாறுகளை கூறுவதன் மூலம் எதுவும் நடந்தேறப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்னதாக ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய நிலை என்ன என்பதை சந்திரிகா அம்மையார் உணர்ந்து எந்த பிரயோசனமும் இல்லை.

ஆனால், அவரின் தற்போதைய நிலைமையை இப்போதைய அதிகாரத்திலும் ஆட்சிப் பீடத்திலும் இருப்பவர்கள் நன்கு புரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

இலங்கையில் நடந்த சார்க் மாநாட்டின் போது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க மாநாட்டில் இருப்பதற்கு ஆசனம் இல்லாமல் அலைந்த வரலாறு இலங்கையில் இருக்கக் கூடியநிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் மறுபக்கம் என்பதே. அந்தப் பதவியில் இருந்தவர்கள்- பதவியில் இருப்பவர்கள்-இருக்க நினைப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பத்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த சந்திரிகா குமாரதுங்க பதவியிழந்த பின்னரான ஆண்டுகளில் அவர் அடைந்த துன்பம் ஜனாதிபதியாக பதவி கிடைக்காமல் இருந்திருக்கலாம் என்று நினைக்கும் அளவிற்கு அவரை ஆளாக்கி விட்டது.

இது தவிர, இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முறையை கொண்டு வந்த காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன தனக்கான ஜனாதிபதிக்கான பதவிக்காலம் முடிவுற்ற போது அந்த இடத்திற்கு பிரேமதாஸவை விருப்பத்தோடு முன்னிலைப்படுத்தவில்லை.

அதேபோல பிரேமதாஸவின் மரணத்தை அடுத்து, ஜனாதிபதியாக இருந்த டி.பி. விஜயதுங்கவை அந்தப் பதவியில் இருந்து வீட்டிற்கு அனுப்பிவைப்பதற்கு சந்திரிகா குமாரதுங்க பட்ட துன்பம் கொஞ்சமல்ல.

இந்த மரபில் சந்திரிகா அம்மையாரும் விதி விலக்கல்ல. தனக்குப் பின் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதில் அவருக்கு இம்மியேனும் விருப்பமில்லை.

சுனாமி நிதியை தனது சொந்தக் கணக்கில் வைப்புச் செய்த எவரும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்க முடியாது என சந்திரிகாஉரக்கக் கத்தினார்.

ஆனாலும், ஜனாதிபதித் தேர்தல் மகிந்த ராஜபக்ஷவை சர்வ அதிகாரம் உள்ளவராக்கிவிட சந்திரிகா அம்மையார் மோசம் போனேன்; மோசம் போனேன் என்று அழாத நாளே இல்லை எனலாம்.

இந்த ஒழுங்கு மரபுகள் இந்த நாடு இன்னொரு ஜனாதிபதியை வேண்டிநிற்கும் வேளையில் விலகிநிற்குமென்று யாரும் நினைத்துவிடக்கூடாது.

சிலவேளைகளில் முன்னையவர்களின் துயரத்தைவிட மிக மோசமாகவும் நிலைமை மாறலாம் என்பதை உணர்தல் அறிவின்பாற்பட்டதாகும்.

# சிறுநீரகப் பாதிப்புகளுக்கு உலோகங்களும் ஒரு காரணம்

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

வடமத்திய மாகாணம் மற்றும் கந்தளாய் , கிராந்துரு கோட்டை, நிக்கவெவ பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற சிறுநீரகப் பாதிப்புகளுக்கு பார உலோகங்கள் ஒரு காரணம் என்பது மருத்துவ ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

உலகசுகாதாரஸ்தாபனத்தின்ஜெனீவா தலைமயகத்தில் தொற்றாநோய்கள் தொடர்பான உலகளாவிய சிரேஷ்ட ஆலோசகரும் இணைப்பாளருமான பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வடமத்திய மாகாணம் மற்றும் கந்தளாய், கிராந்துரு கோட்டை, நிக்கவெவ பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகமாகும்.

இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் இப்பாதிப்பு அதிகரித்துக் காணப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புடன் பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் தலைமையில் ஒரு வருடத்திற்கும் மேலாக இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆய்வு தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இச்செய்தியாளர் மாநாட்டின் போதே மேற்படி தகவல்களை பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற சிறுநீரகப் பாதிப்பு இலங்கைக்கு மாத்திர முரியதல்ல. மாறாக எல்சல்வடோர், சீனா, கம்போடியா, பங்களாதேசம், நிக்கராகுவா உட்பட 10 நாடுகளில் இவ்வாறான பிரச்சினை இருக்கின்றது என்றாலும் அந்நாடுகளை விடவும் இலங்கையில்தான் இப்பாதிப்பு தொடர்பாக விரிவான அடிப்படையில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

மேற்படி பிரதேசங்களில் வாழும் 15 வயது முதல் 70 வயது வரையானோரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளை சிறுநீரகப் பாதிப்பு தொடர்பான ஆய்வுக்கு உட்படுத்தினோம். இவர்களில் 15.9 சதவீதத்தினர் சிறுநீரகக் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதை அடையாளம் காண முடிந்துள்ளது.

சர்வதேச மட்ட ஆய்வு முடிபுகளின் படி சிறுநீரகப் பாதிப்புக்கு கெட்னியம் ஆசனிக் போன்ற பார உலோகங்கள் பாரிய பங்களிப்பு செய்கின்றன. இந்த உலோகங்களை அடிப்படையாக வைத்து இலங்கையில் பாதிப்பு காணப்படும் பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட தண்ணீர், உணவுப் பொருட்கள், மண் என்பவற்றின் மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தினோம். இவற்றில் தண்ணீரில் பார உலோகங்களின் பிரச்சினை இல்லை.

ஆனால் உணவுப் பொருட்களில் காணப்படும் பார உலோகங்களின் மட்டம் தற்போதுள்ள அளவை விடவும் அதிகரிக்குமாயின் அது பிரச்சினையாக மாறும். அதேநேரம் நிலத்தில் காணப்படும் பார உலோகங்களின் அளவைக் குறைப்பதும் அவசியம்.

இந்தப்பார உலோகங்கள் வளிமண்டலத்தின் ஊடாக மனித உடலுக்குள்ளும் நிலத்திலும் சேருகின்றது. இதற்கு வளிமண்டலம் மாசடைவது முக்கிய காரணி என்றார். (அ-2)

# இலங்கை வரும் சிவ்சங்கர் கூட்டமைப்பைச் சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிர்வரும் வியாழக்கிழமை வருகைதரவுள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்து அறிவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்தித்து முக்கிய பேச்சு நடத்துவார்.

பிராந்திய பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களைப் பேசுவதற்காக சிவ்சங்கர் மேனன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் தனித் தனியே சந்தித்து பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் தொடர்பிலான நிகழ்ச்சி நிரலில் இல்லாவிட்டாலும் அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்களிடமிருந்து அறிய முடிகின்றது.

வடக்கில் தமிழர்களின் காணி சுவீகரிப்பு, இலங்கை படைத்தரப்பினரின் அளவுக்கதிகமான பிரசன்னம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பான விடங்களில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன் வைத்து வரும் குற்றச்சாட்டுகளின் தாற்பரியங்கள் குறித்தும் அவை குறித்தான கவலைகளையும் சிவ்சங்கர் மேனன் கேட்டறிவார் என அந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

இதற்கிடையில் இலங்கையிலிருந்து சிவ்சங்கர் மேனன் இந்திய திரும்பிய பின்னர் இந்திய அரசு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்துவதற்காக அவர்களை அங்கு அழைக்குமென இவ்வட்டாரங்களிலிருந்து மேலும் தெரிய வருகின்றது. (அ-2)

# கிளி., முல்லை வலய க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலய க.பொ.த (உ/த) கணித, உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான பௌதிகவியல் பாடச் செயலமர்வு இன்றும் நாளையும் மு/ வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வில் எஸ்.சோதிலிங்கம், ஆர்.குமரன் ஆகிய ஆசிரியர்கள் வளவாளர்களாகச் செயற்படவுள்ளனர்.

மேலும் எதிர்வரும் ஜூலை மாதம் 11, 12ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள சிங்கள, தமிழ்மொழிமூலப் பிரபல்ய பாடசாலைகளில் விநியோகிக்கப்பட்ட மாதிரிப்பரீட்சை வினாத்தாள்களும் கொழும்பு முன்னணி ஆசிரியரினால் மு/வித்தியானந்தா கல்லூரியில் மேற்கொள்ளப்படும் செயலமர்வில் இடம் பெறவுள்ளன.

இறுதிச் செயலமர்வுகள் எதிர்வரும் ஜூலை மாதம் 18, 19ஆம் திகதிகளில் யாழ்.முன்னணி உயிரியல், இணைந்த கணித ஆசிரியர்களினால் மு/வித்தியானந்தா கல்லூரியில் நடத்தப்படவுள்ளன.

வடமாகாணக் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய இச் செயலமர்வு இவ்வருடம் மேமாதம் முதலாந் திகதியிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்களில் நடத்தப்பட்டு வருகின்றது. இச்செயலமர்விற்கு வளவாளர்களாக யாழ்.மாவட்ட முன்னணி ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# நடமாடும் நூலகசேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகத்தினரால் நூலக செயற்பாட்டுத்திட்டத்தின் கீழ் நடமாடும் நூலக சேவை இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கணபதி முன்பள்ளியில் நடைபெறவுள்ளது. (அ-3-29)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வீர இளைஞருக்கு



இலட்சியம் உடையவன் ஆயிரம் தவறுகள் செய்தால் அது இல்லாதவன் ஐயாயிரம் தவறுகள் செய்வான் என்பது உறுதி. ஆதலால் இலட்சியம் மிகவும் தேவை.

ஆம் உங்கள் இயல்பை மட்டும் உணர்ந்துவிட்டால் நீங்கள் தெய்வங்களே.

உங்களை இழிவுபடுத்துவதாக எப்போதாவது எனக்குத் தோன்றுமானால் அது உங்களை மனிதர்கள் என்னும்போதுதான்.

முதலில் நாம் தெய்வங்களாவோம்.பிறரும் தெய்வங்களாகத் துணை செய்வோம். ஆகுக. ஆக்குக- இதுவே நமது தாரக மந்திரம் ஆகட்டும்.

எழுந்திருங்கள். உழையுங்கள். இந்தவாழ்வு எத்தனை நாளைக்கு? உலகில் வந்துவிட்டீர்கள். அதற்கு அறிகுறியாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கும் மரங்கள் மற்றும் கற்களுக்கும் என்னவேறுபாடு? அவையும் தோன்றுகின்றன, கெடுகின்றன, மறைகின்றன.

உனக்குள் இருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்து. அதைச்சுற்றி ஒவ்வொன்றும் அதற்கு இசைவா ஒழுங்குபடுத்தப்படும்.

இறக்கும் வரை பணி செய். நான் உன்னுடன் உள்ளேன்; நான் போனபின் எனது ஆன்மா உன்னுடன் உழைக்கும்.

இந்த வாழ்வு வரும், போகும். செல்வமும் புகழும் போகமும் சிலநாட்களுக்கே. உலக ஆசையில் மூழ்கிய ஒரு புழுவாக இறந்தாலும் உண்மையைப் போதித்துக்கொண்டே செயற்களத்தில் உயிரை விடுவது நல்லது.மிக நல்லது.

# ஐ.சி.சி. தரவரிசையில் டோனி பின்னடைவு

சர்வதேச ஒருநாள் போட்டியில்
சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐசிசி)
சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின்
களுக்கான தரவரிசைப் பட்டியலில்
திரசிங் டோனி 4ஆவது இடத்திலி
தள்ளப்பட்டார்.

இவர் 5ஆவது இடத்தை
குடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.
ஹோலி 3ஆவது இடத்திலும் கெள
நீடிக்கின்றனர். தென்னாபிரிக்கா
ளார். பந்துவீச்சாளர்களுக்கான தரவரி
வின் 6ஆவது இடத்திலிருந்து 5ஆவது

ஏனைய இந்திய வீரர்களான ரவீந்திர
(34ஆவது இடம்), சஹீர்கான் (35ஆவது
முனாப் பட்டேல் (50ஆவது இடம்) ஆகி
முதலிடத்தில் தென்னாபிரிக்காவின் டசாட்

அணிகளுக்கான தரவரிசையில் 123
லிடத்திலும் 118 புள்ளிகளுடன் தென்னாபி
117 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தில் உள்

இலங்கை அணிகள் தலா 112
ஆவது இடத்தில் உள்ளன.



சிறந்துவிளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை
டுபாயில் வெளியிட்டது.

ஒருநாள்போட்டி துடுப்பாட்ட வீரர்
இ ந் தி ய அணியின் அணித்தலைவர் மஹேந்
ருந்து 5ஆவது இடத்துக்கு

இங்கிலாந்து வீரர் அலியஸ்டர் குக்
ஏனைய இந்தியவீரர்களான விராட்
தம் கம்பீர் 17 ஆவது இடத்திலும்
வின் ஹாசிம் அம்லா முதலிடத்தில் உள்
சையில் இந்திய சுழற்பந்துவீச்சாளர் அஷ்
இடத்துக்கு முன்னேறினார்.

ஜடேஜா (31ஆவது இடம்), ஹர்பஜன் சிங்
இடம்), பிரவீன்குமார் (36ஆவது இடம்),
யோர் டொப் 50 வரிசையில் உள்ளனர்.
சொபே உள்ளார்.

புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா அணி முத
ரிக்க அணி இரண்டாமிடத்திலும் இந்திய அணி
ளது. இங்கிலாந்து,
புள்ளிகளுடன் முறையே நான்காவது மற்றும் 5

# கூடைப்பந்தாட்டப்போட்டி



யாழ். பல்கலைக் கழக அணிக்கும் பற் றீசியன் அணிக்கும் இடையிலான கூடைப் பந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற விறுவிறுப்பான கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 58 புள்ளிகளையும் யாழ். பல்கலைக் கழக அணி 47 புள்ளிகளையும் பெற்று யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் அல்வாய் நண்பர்களுக்கு நிதிஒதுக்கீடு

(கரவெட்டி)

வடமாகாண விளையாட்டு திணைக்களம் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தை புனரமைக்க 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் போட்டியில் பங்குபற்றுவதற்கு நீண்டகாலமாக பொது மைதானம் இன்மையால் இவ்விளையாட்டு கழகத்தைப் புனரமைத்து வடமராட்சி பிரதேசத்தை சேர்ந்த அனைத்து வீரர்களும் பங்குபற்றுவதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்படவுள்ளது.

இவ்விளையாட்டு கழக புனரமைப்புப் பணி மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்படத்தக்கது. (3-24)



மூதூர் பிரதேசத்திலுள்ள சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.மூதூர் பிரதேசசபை உறுப்பினர் ஜே. ஐஸ்ரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார, சிறுவர் நன்நடத்தை, விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எஸ்.சுபைர் , கிண்ணியா நகரபிதா டாக்டர் எம். ஹில்மி, மூதூர் சிறுவர் நன்னடத்தை நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். அனீஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.கிழக்கு மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.




# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தியது இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த மேற்கிந்தியத்தீவுகள்
கும் இடையிலான ஒரேயொரு இருபது-20 போட்டியில்
ட்ரெண்ட் பிரிட்ஜில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்
தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானி

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்
ந்து 1 72 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி
ஓட்டங்களை 6.2 ஓவர்களில் எடுத்திருந்த போதி
ணிக்கையொன்றை பெற்றுக்

துடுப்பாட்டத்தில் மேற்கிந்
களில் 74 ஓட்டங்
ஆட்டமிழக் காமல்
பந்துகளில் ஆட்
றனர். பந்துவீச்சில்
ஓவர்களில் 22
ஆகியோர் தலா
இலக்கை நோக்
மாத்திரமே
களுக்கு



இங்கிலாந்து அணி 7 விக்
போட்டியில் நாணயச்சுழற்சியில்
த்தது.

தீவுகள் அணி 20 ஓவர்களில்
ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டு
லும், பின்னர் அதிரடியாக ஆடி
கொண்டது.

திய அணி சார்பாக டுவைன்
களையும், டுவைன் பிராவோ 36
54 ஓட்டங்களையும், கிரான்
டமிழக்காமல் 23 ஓட்டங்க
இங்கிலாந்து அணி சார்பாக



அணிக்கும் இங்கிலாந்து அணிக்
கெட்டுக்களால் வெற்றி பெற்றது .
வெற்றி பெற்ற மேற்கிந்தியத்

4 விக்கெட்டுக்களை இழ
க்களை இழந்து 30
சிறந்த ஓட் எண்

ஸ்மித் 54 பந்து
பந்துகளில்
பொல்லார்ட் 13
ளையும் பெற்
ஸ்ரீபன் பின் 4

ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஸ்ரூவர்ட் பிரோட், கிரேம் ஸ்வான் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.173 ஓட்டங்கள் என்ற சவாலான வெற்றிகித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணியின் முதல் விக்கெட் 10 ஓட்டங் வீழ்த்தப்பட்ட போதிலும், இரண்டாவது விக்கெட்டுக்காக 159 ஓட்டங்கள் குவிக்கப்பட அவ்வணியின் வெற்றி இலக்கு இலகுவானது.துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலெக்ஸ் ஹேல்ஸ் 68 பந்துகளில் 99 ஓட்டங்களையும், ரவி போபாரா 44 பந்துகளில் 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ரவி ராம்போல் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மார்லன் சாமுவேல்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.போட்டியின் நாயகனாக இங்கிலாந்தின் அலெக்ஸ் ஹேல்ஸ் தெரிவானார்.

# சிறிலங்கா பிறிமியர் லீக்; போதுமான வரவேற்பு!

சிறிலங்கா பிறிமியர் லீக் அணிகளுக்கான ஏலத்துக்கு சிறந்த வரவேற்புக் கிடைத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அணிகளை குத்தகை அடிப்படையில் வாங்குவதற்கான ஏலத் தினம் நேற்றுமுன் தினம் நிறைவடைந்ததை அடுத்தே இலங்கை கிரிக்கெட் சபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இத்தொடரில் ஏழு அணிகள் பங்குகொள்ளவுள்ள நிலையில் ஒவ்வொரு அணிக்கும் சராசரியாக 4.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஏலத் தொகையாகக் கோரப்பட்டுள்ளது.

எனினும் வெற்றி பெற்ற ஏலத்தொகையாளர்கள் பற்றிய விபரம் இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே வெளிவரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஐபிஎல் தொடரோடு ஒப்பிடும்போது மிகக் குறைவானது என்ற போதிலும் சிறிலங்கா பிறிமியர் லீக்கைப் பொறுத்தவரை சிறந்த வரவேற்பாக கருதப்படுகிறது.

முதலாவது ஐபிஎல் தொடரில் 8 அணிகள் மொத்தமாக 723 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்பட்டிருந்தன.

எனினும் அண்மையில் நிறைவு பெற்ற பங்களாதேஷ் பிறிமியர் லீக் தொடரோடு ஒப்பிடும்போது இது சிறந்ததாக கருதப்படுகிறது.

பங்களாதேஷ் பிரிமியர் லீக்கில் ஒவ்வொரு அணியும் ஏறத்தாழ ஒரு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குகே விற்கப்பட்டிருந்தன.

பங்களாதேஷ் பிரிமியர் லீக், இந்தியன் பிரிமியர் லீக் ஆகியவற்றோடு ஒப்பிடும் போது சிறிலங்கா பிரிமியர் லீக்கின் அணிகள் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. அணிகள் குத்தகைக்கு மாத்திரமே விடப்படுகின்றன.

குத்தகைக் காலம் முடிபடைந்த பின்னர் குத்தகைகளை புதுப்பிக்கவேண்டிய தேவை காணப்படுகிறது.

# சம்பியன்ஸ் கிண்ணம் தென்னாபிரிக்காவில்

இந்திய கிரிக்கெட் சபை இணைந்து நடத்தும் சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான இவ்வாண்டுப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் இடம்பெறவுள்ளன.

இவ்வாண்டுக்கான போட்டிகள் கேப்டவுண், ஜொஹன்னஸ்பேர்க், டேர்பன் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன.


இந்தியன் பிரிமியர் லீக்கில் முதல் 3 இடங்களைப் பெற்றுக் கொண்ட அணிகள் உட்பட, அந்தந்த நாட்டு இருபது-20 தொடர்களில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட அணிகள் இத் தொடரில் பங்குபற்றுகின்றன.

இந்தியக் கிரிக்கெட் சபை, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை, அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆகியன இணைந்து இத்தொடரைநடத்துகின்றன.


இந்திய பாரம்பரிய தினங்கள் சில அந்தந்த நாட்களில் வருவதன் காரணமாக இந்தியாவில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை நடத்த முடியாமல் போனது.

4-வது தடைவையாக இந்தாண்டு இடம்பெறவுள்ள தொடரில், தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இடம் பெறுவது இது இரண்டாவது தடவையாகும்.

ஏற்கெனவே 2010ஆம் ஆண்டிலும் தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இடம்பெற்றது.



லண்டனில் நடக்கும் விம்பிள்டன் டென்னிஸ் முதல் சுற்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் ஜுயன் கார்லோஸ் பெரிரோவை வீழ்த்தினார். பந்தை திருப்பி அனுப்பிய ஜோகோவிச்.



லண்டனில் நடக்கும் விம்பிள்டன் டென்னிஸ் முதல் சுற்றில் ஆஸ்திரேலியாவின் ரோடியோனாவை வீழ்த்திய ரஷ்யாவின் மரியா ஷரபோவா.

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் 50வது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு நடைபெற்றுவரும மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று மாலை 3.45 மணியளவில் ஸ்ரீவிக்னேஸ்வரா விளையாட்டுமைதானத்தில்நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் மாலை 3.45 மணிக்கு வல்வெட்டித்துறை வல்லை விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகமும், மாலை 4.45 மணிக்கு புத்தூர் வீனஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன.

நாளைய போட்டியில் மாலை 3.45 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டு கழகமும் மாலை 4.45 மணிக்கு கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து இளவாலை சென்றூட் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன.

# முறிகண்டி மக்களை...

மீள்குடியேற வந்தவர்களை எங்கே கொண்டு சென்றார்கள் என்பதற்கான பதிலினை இந்த அரசு சொல்லவேண்டும். மீள்குடியேற வந்த இந்த மக்களை ஏன் இந்த இராணுவம் கைது செய்த கொண்டு போக வேண்டும் எனக் கேட்கிறோம். இந்த விடயத்தை நாம் சர்வதேசத்திற்கு கொண்டு செல்வோம். இதற்கு நியாயம் கேட்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

காணி சுவீகரிப்புக்கு எதிராக கவன ஈர்ப்பு போராட்மொன்று நேற்று முற்பகல் முறிகண்டி பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் நடத்தப்பட்டது. தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்த நிலையில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே மாவை எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

நாங்கள் வாழும் உரிமையை இந்த அரசு இராணுவத்தினூடாகவும் பௌத்த குருமார்களினூடாகவும் திட்டமிட்டு எங்கள் நிலத்தை ஆக்கிரமித்து எங்கள் குடியிருப்புக்களில் புத்த விகாரைகளையும் இராணுவ முகாம்களையும் அமைத்துக் கொண்டு எங்களை அகதிகளாக்கி வருகின்றது.

இன்னும் இலட்சக்கணக்கான மக்கள் தமது இடங்களுக்கு போகாமைக்கு காரணம் இராணுவம் அவர்களின் நிலத்தை ஆக்கிரமித்திருப்பதும் பௌத்த குருமார் புத்தர் சிலைகளை வைத்து அவ்விடங்களில் விகாரை அமைத்து ஆக்கிரமிப்பதுமேயாகும். தமிழ் மக்களுடைய பண்பாடு, கலாசாரம், அவர்களுடைய நில உரிமை, வாழ்வுரிமை, ஜனநாயக உரிமை என அனைத்து உரிமைகளையும் அழித்து இனஅழிப்பு வேலையில் இந்த அரசும் இராணுவமும் பௌத்த குருமாரும் ஈடுபடுகின்றார்கள்.

இதற்காக நாம் தற்போது ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் நகரத்தில் இருந்தும் மக்களின் மத்தியில் இருந்து எமது குரலை எழுப்புகின்றோம் என்றார். (8-11)

# இசட் புள்ளி...

உறுதிப்படுத்துகிறது என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் ஆனால், இது தொடர்பாக மேன்முறையீடு செய்வது குறித்து ஆலோசித்து வருவதாகவும் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சமரநாயக்க மற்றும் இம்முறை இசட் புள்ளியை கணித்த ஐவர் கொண்ட குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான களனி பல்கலைக்கழக பேராசிரியர் சரத் குலதுங்க ஆகியோரும் இச் செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர். (8-4)

# ஏற்றுமதி...

மாபெரும் பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் மகிந்த அரசு, நாட்டு மக்களின் நலன் கருதி பொருத்தமான முறையான பொருளாத்ரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தாதது ஏன்? என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷா டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பதை மக்கள் நன்கு அறிந்துள்ளனர். எல்லோரையும் சிலநேரத்தில் மட்டுமே முட்டாள்கள் ஆக்கலாம். எல்லோரையும் எல்லா நேரத்திலும் முட்டாள்களாக்க முடியாது என்பதை மகிந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (8,11)

# இராணுவமே வெளியேறு!...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் பொது மக்கள் என பலரும் திரண்டு; தமிழ் பிரதேசங்களில் இலங்கை அரசு இராணுவத்தின் உதவியுடன் நில ஆக்கிரமிப்பு செய்வதை எதிர்த்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயம் முன்பாக நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை நடத்தியுள்ளனர்.

ஆலயமுன்றலில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் படைத்தரப்பு, பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவின்ரின் அச்சுறுத்தல் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அரச இயந்திரத்தின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தமது பலத்த கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.

பல்வேறு அழுத்தங்களின் மத்தியில் இப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், இராணுவமே எங்கள் மண்ணை விட்டு வெளியேறு, விரட்டியடிக்கப்பட்ட திருமுறிகண்டி மக்கள் எங்கே என கோஷம் எழுப்பியதுடன்; பல தூரப் பட்ட சுலோகங்களை ஏந்தியவாறும் நின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், வினோ, சரவணபவன், சுமந்திரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் லண்டன் கிளையைச் சேர்ந்த விஜயரட்ணம், கூட்டமைப்பின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் சிங்கள முற்போக்குக் கட்சிகளான நவசமசமாஜக் கட்சியின் பிரதிநிதிகள், லங்கா சமாஜக் கட்சியின் பிரதிநிதிகள் உட்பட ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ.கஜேந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி உட்பட பலர் தமது கண்டன உரைகளையும் எதிர்ப்புக்களையும் அமைதியான முறையில் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை முறிகண்டி பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்கள் கடந்த சில தினங்களாக திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த நிலையில் இம் மக்களை மீண்டும் இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு வாகனங்களில் ஏற்றி மெனிக்பாம் நலன்புரி நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதன்காரணமாக நேற்று ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்க முன்னர் சிறு பதற்றம் காணப்பட்டாலும் எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது. (8-3,15,266)

# யாழ்.மாதகல் பகு...

மேலும் அப்பகுதியைச் சேர்ந்த பல நூறு குடும்பங்கள் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வரும் சூழலில் அவர்கள மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்கு செல்வதை அனுமதிக்க இராணுவம் மறுக்கிறது எனவும் சுரேஷ் பிரேமச் சந்திரன் பி.பி.ஸி தமிழோசையிடம் குறிப்பிட் டுள்ளார்.

போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தங்கள் சொந்த இடங் களிலேயே மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து நாடாளு மன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அழுத் தம் கொடுத்து வந்தாலும் அரசு அதற்கு செவி மடுக்காத சூழலே உள்ளது.

அரசின் ஆதரவை முழுமையாகப் பெற் றுள்ள பாதுகாப்புப் படையினர் தாங்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் விரும்பியதைச் செய்ய முடியும் என்பதற்கு இச்சம்பவம் மேலும் ஓர் எடுத்துக் காட்டாகவே உள்ளதென் றும் அவர் மேலும் தெரிவித்தார். (8,11)

# வட மாகா...

கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படும் வரை இவர் குறித்த பதவி யிலிருப்பார் என வும் தெரிவிக்கப்படு கின்றது. (8,6)

# பல்கலைக்கழக ஊழி...

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் பல்கலைக்கழகத்தில் நேற்று பிற் பகல் 2.30 மணியளவில் இடம் பெற்ற விசேட கலந்துரையாட லில் கூட்டுக்குழு உடன்படிக் கையை நடைமுறைப்படுத்தும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனக் கூட்டுக் குழு, உயர்கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர், திறைசேரியின் தலைவர், தொழில் ஆணையாளர் உள்ளிட் டோர் பங்கு கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலின் போது தொழிற்திணைக்கள ஆணை யாளர் முன்னிலையில் கூட்டு உடன் படிக்கையை நடைமுறைப்படுத்த தாம் இணங்குவதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு வின் தலைவர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளார்.

கூட்டு உடன்படிக் கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு நடைமுறைப்படுத்த இணங்கியதை அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் கல்வி சாரா ஊழியர்கள் நேற்று இரவு பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர்.

இதேவேளை இன்று காலை 8.30 மணி அள வில் பல்கலைக் கழகத் தின் இராமநாதன் மண்ட பம் முன்பாக யாழ்ப் பல்கலைக் கழக கல்வி சார ஊழியர் கள் அனைவரையும் ஒன்று கூடுமாறு ஊழி யர் சங்கத்தின் தலை வர் எஸ்.தங்கராஜா கேட் டுள்ளார். (8-6)


## வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் தன் கிளைகளை கொண்டுள்ள INNOVAGE INTERNATIONAL COMPANY தன் 42வது கிளையை யாழ் நகரிலும் திறந்துள்ளது. O/L படித்தவர் களிலிருந்து உள்வாங்கப்படும் இவ் வேலைக்கு ஆங் கில அறிவும், முன் அனுபவமும் தேவையில்லை. 6 மாத கால வியாபார முகாமைத்துவத்தினூடாக ரூ. 35,000 சம்பள எல்லையை எட்டும் வாய்ப்பு. முந்தும் 25 பேருக்கு முன்னுரிமை. புனர்வாழ்வு நிலையத்திலி ருந்து வெளிவந்த 30 வயதுக்குட்பட்டோருக்கும் முன் னுரிமை.

அழைக்க வேண்டிய இலக்கம் :- 0772-151014
0778-330074

குறிப்பு:-

★ பயிற்சிக் காலத்தில் தங்குமிடம் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

★ பயிற்சிக் காலத்தின் போதும் மாதாந்தம் ரூ. 8000 ற்கு குறையாமல் பெற்றுக் கொள்ள முடியும்.

(8708)

## யாழ் மண்ணில்....



## கல்யாணமாலை

KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)



இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது.

பதிவுக் கட்டணம்
ரூ. 1000/- மட்டுமே

அலுவலக நேரம் : வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை

குறிப்பு:- பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம்.
திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

## Cambridge Management College

FRENCH, DEUTCH, SINHALA & ENGLISH
ஆகிய மொழிகளை இலகு வாகவும் எளிமையாகவும் லேசாக, எழுத, வாசிக்க, பேச கற்பிக்கப்படுகின்றது.

INFORMATION TECHNOLOGY
DIPLOMA IN MS.OFFICE
DIPLOMA IN HTML
DIPLOMA IN WEB DESIGNING
ஆகிய கணனிக் கற்றை நெறிகளும் சிறுவர்களுக்கான ICT, English மொழியும் கற்பிக்கப்படுகின்றது.

23, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம் (கச்சேரி பஸ் நிலையம் முன்பாக)
தொ.பே:- 021 222 1818 / 077 774 0999

(8683)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் [துங்கம்மா ரீச்சர்]

### ஓய்வு நிலை ஆசிரியர், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து அன்போடும், பண்போடும், பாசத் தோடும் எமைப் பாதுகாத்து சீரோடும், சிறப்போடும், நாம் வாழ வழிகாட்டி, பேரோடும் புகழோடும் இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது அன்புத்தாய் திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்களது 31 ஆம் நாள் நினைவஞ்சலித் தினத்தில் எமது குலவிளக்கான அன்புத் தெய்வத்தை சிரந்தாழ்த்தி இருகரங்கூப்பிட்டு வணங்குகின்றோம்.

அன்னார் இறைபதம் அடைந்த செய்திகேட்டு தொடர்புச் சாதனங் கள் மூலமும் நேரில் வந்தும் துயர் பகிர்ந்த அனைத்து அன்புள்ளங் கள், அந்திமக்கிரியைகள், இறுதி ஊர்வலம் ஆகியவற்றில் பங்குபற் றிய சகல அன்பர்கள், மலர்வளையங்களைச் சாத்தியவர்கள், அஞ்சலி துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டவர்கள், அஞ்சலி உரையாற் றிய பெரியோர்கள், உசன் இராமநாதன் மகா வித்தியாலய சமூகத்தினர், அமரருக்கு ஓர் அஞ்சலியையும் சிறப்புற நடாத்தி எமக்கு துயர் பகிரும் துண்டுப் பிரசுரத்தையும் வழங்கிய கனடா உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியத்தினர்,உசன் இந்து இளைஞர் மன் றத்தினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர், அமரர் நோயுற்ற போது சிகிச்சையளித்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் கள், தாதிமார்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், வட்டுக்கோட்டைதொழில் நுட்பக்கல்லூரிச் சமூகத்தினர், திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய சமூகத்தினர், இவரின் ஞாபகார்த்தமாக வெளிவரும் 'தெய்வதரிசனம்' என்னும் மலர் வெளிவர உதவியவர்கள் மற்றும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர், அமரரின் சகல கிரியைகளையும் செய்த சிவாச்சாரியார்கள் ஆகிய சகலருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:-குடும்பத்தினர்

(C-322)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.